பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்

INTERNET

மூலம் தொடர்புகொள்ள உள்நாடு, வெளி நாடுகளுக்கான சகலவிதமான துரித தபால்/ பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி

T.P -021-222-7310 (சி-1844)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 06 (25.06.2004) வெள்ளிக்கிழமை இதழ்:266

# கருணாவுக்கு ராணுவப் பாதுகாப்பு; அமைச்சர் மங்கள சமரவீர ஒப்புதல்!

## கொழும்பு அரசியல் வட்டாரத்தில் சர்ச்சை

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா கொழும்பில் தங்கியிருப்பதற்கு, படையினர் பாதுகாப்பு வழங்கி உதவியதாக அமைச்சரவைப் பேச்சாளரான மங்கள சமரவீர நேற்று ஒப்புக் கொண்டதையடுத்து கொழும்பு அரசியல், இராணுவ வட்டாரங்களில் பலத்த சர்ச்சை உருவாகியுள்ளது.**

**நேற்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்ததாவது -**



கருணா கொழும்பில் தங்கியிருக்கும் விடயத்தில் சில இராணுவத்தினரே தொடர்பு பட்டிருப்பதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. ஆனால் நாங்கள் இதில் சம்பந்தப்பட வில்லை.

கருணாவிற்கு பாதுகாப்பு இராணுவத்தால் கொடுக்கப்பட்டது என்பது இதுவரை வெளிப் படையாக நிருபிக்கப்படவில்லை. ஆனால் பாதுகாப்பு அமைச்சு இதனைச் செய்திருக்கலாம்.

கருணாவிற்கு பாதுகாப்பு வழங்குவதென்பது இப்போது வெளிப்படை. ஆனால், கருணா எங்கிருக்கின்றார் என்பதனை தெரிவிக்கமுடியாது. எமது கொள்கைகளில் மாற்றம் என்பது இல்லை. யாராவது வந்து எமக்கு பாதுகாப்புத் தாருங்கள் என்று கேட்டால் நாங்கள் பாதுகாப்பு வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

கருணா தப்பிச் சென்ற பிறகு படையினர் அடைக்கலம் கொடுத்த அதேவேளை - அவரது முன்னாள் சகபாடியை கொலை செய்வதற்கும் படையினர் உதவியுள்ளனர்.

கருணாவை கொழும்புக்கு அழைத்து வந்ததில் படையினர் மட்டுமல்லாது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் உட்பட ஐக்கிய தேசிய முன்னணிக்கும் தொடர்புள்ளது.

கருணாவின் மனைவி, பிள்ளைகளை வெளிநாடு அனுப்புவதற்கு முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட உதவியுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவுக்கு பாதுகாப்பு வழங்குவது பாதுகாப்பு செயலருக்கு தெரியாதாம்!

(லண்டன்)

கொழும்பில் இராணுவப் பாதுகாப்பில் இருந்தார் என்ற குற்றச்சாட்டு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இது குறித்து அமைச்சர் மங்கள சமரவீர எந்த அடிப்படையில் பேசினார் என்பது குறித்து கருத்துக் கூற முடியாதென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

அமைச்சர் மங்கள சமரவீர, கருணா பற்றி என்ன சொன்னார் என்பது பற்றி கருத்துக் கூறமுடியாது. அவர் எந்த அடிப்படையில் சொன்னார் எனவும் என்னால் கூறமுடியாது.

அவர் எந்த ஆதாரத்தைக்கொண்டு சொன்னார் என்பது பற்றி அவரிடமே கேட்கவேண்டும். உண்மையில் அவர் கூறியது பற்றிக் கருத்துக்கூற எனக்கு உரிமையில்லை.

ஆனால் பாதுகாப்பு அமைச்சைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ரவி கருணா நாயக்காவுக்கு பிடிவிறாந்து பிறப்பிக்க கோட்டை நீதிபதி மறுப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவை கைது செய்வதற்கு பிடிவிறாந்து பிறப்பிக்க கோட்டை மஜிஸ்ரேட் நீதிபதி சரத் கருணாரத்தின மறுத்துள்ளார்.

ஒரு கோடியே 56 இலட்சம் ரூபாவினை முறையற்றவிதத்தில் பயன்படுத்தியமை குறித்து ரவி கருணாநாயக்காவைக் கைது செய்ய பிடிவிறாந்து பிறப்பிக்குமாறு கொழும்பு மோசடித் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி றொகான் குணசேகர நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்து கோரிக்கை விடுத்தார்.

ஆனால், பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்த நீதிபதி நேற்று முன்தினம் அரசாங்க ஊடகங்களில் கோட்டை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தைத் தொடர்புபடுத்தி செய்தி வெளியிட்டமை குறித்து கடுமையான கண்டனம் தெரிவித்தார்.

பொலிஸ் நடவடிக்கைகளில் நீதிமன்றத்தைத் தொடர்புபடுத்தி, அரச ஊடகங்கள் ஊடாக அரசியல் இலாபம் பெறவேண்டாம் என் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவுடன் இராணுவத்துக்கு எந்தத் தொடர்பும் இல்லையாம்!

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்

கருணாவுக்கும், இராணுவத்துக்கும் தொடர்புகள் இருப்பதை அரசாங்கப் பேச்சாளரான அமைச்சர் மங்கள சமரவீர ஏற்றுக்கொண்ட அதேவேளை -

கருணாவுக்கும் இராணுவத்துக்கும் எதுவித தொடர்புகளும இல்லையென்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சரான ரத்னசிறி விக்கிரம நாயக்க மறுப்புத் தெரிவித்தார்.

கொழும்பு இராணுவ வைத்திய சாலைக்கு நேற்றுக் காலை விஜயம் செய்து நிலைமையைப் பார்வை (12 ஆம் பக்கம் பார்க்க)

## திங்களன்று சொல்ஹெய்ம் கொழும்புக்கு வருகிறார்!

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு வரவுள்ளார்.

தடைப்பட்டுப் போயுள்ள - அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேசசுக்களை மீளவும் ஆரம்பிக்கும் நோக்குடனேயே எரிக் சொல்ஹெய்ம (12 ஆம் பக்கம் பார்க்க)

கருணாவுக்கும், இராணுவத்துக்கும் தொடர்புகள் இருப்பதை அரசாங்கப் பேச்சாளரான அமைச்சர் மங்கள சமரவீர ஏற்றுக்கொண்ட அதேவேளை -

கருணாவுக்கும் இராணுவத்துக்கும் எதுவித தொடர்புகளும இல்லை யென்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சரான ரத்னசிறி விக்கிரம நாயக்க மறுப்புத் தெரிவித்தார்.

கொழும்பு இராணுவ வைத்தியசாலைக்கு நேற்றுக் காலை விஜயம் செய்து நிலைமையைப் பார்வை

(12 ஆம் பக்கம் பார்க்க)

வரவுள்ளார்.

தடைப்பட்டுப் போயுள்ள - அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்கும் நோக்குடனேயே எரிக் சொல்ஹெய்ம

(12 ஆம் பக்கம் பார்க்க)

ஒரு கோடியே 56 இலட்சம் ரூபாவினை முறையற்றவிதத்தில் பயன்படுத்தியமை குறித்து ரவி கருணாநாயக்காவைக் கைது செய்ய பிடிவிறாந்து பிறப்பிக்குமாறு கொழும்பு மோசடித் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி றொகான் குணசேகர நீதி

வெளியிட்டமை குறித்து கடுமையான கண்டனம் தெரிவித்தார்.

பொலிஸ் நடவடிக்கைகளில் நீதிமன்றத்தைத் தொடர்புபடுத்தி, அரச ஊடகங்கள் ஊடாக அரசியல் இலாபம் பெறவேண்டாம் என்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் வாகனங்கள் விஷமிகளால் தீக்கிரை

## ஒரு கோடி 20 லட்சம் ரூபா சேதம்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அகற்றும் நிறுவனமான ஹலோ ட்ரஸ்ட்டின் வாகனத் தரிப்பிடத்துக்குள் நுழைந்த இனந்தெரியாத குழுவொன்று அங்கிருந்த நான்கு வாகனங்களை முற்றாகத் தீயிட்டு அழித்ததுடன், மேலும் பல வாகனங்களைச் சேதப்படுத்தியது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுமார் ஒரு கோடி 20 லட்சம் ரூபா பெறுமதியான சேதங்கள் ஏற்பட்டதாக மேற்படி நிறுவன அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும தெரியவருவதாவது -

யாழ்.குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் பிரிட்டனை தளமாகக் கொண்டு இயங்கும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் வாகனத் தரிப்பிடம் நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ளது.

இந்த வாகனத் தரிப்பிடத்துக்குள் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இனந்தெரியாத 20 பேர் கொண்ட குழு முகமூடிகளுடன் நுழைந்தது.

அங்கு காவலில் ஈடுபட்டிருந்த நான்கு காவலாளிகளையும் அடித்துக் காயப்படுத்திவிட்டு, இந்தக் குழுவினர் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களை அடித்து நொருக்கினர்.

கற்கள், பொல்லுகளால் வாகனங்களை அடித்து நொருக்கிய அதேவேளை, ஒரு பகுதி வாகனங்களை தீயிட்டும் எரித்தனர்.

26 வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்த இந்தத் தரிப்பிடத்தின் மீது

(12 ஆம் பக்கம் பார்க்க)







## உறவினர்களிடையே தகராறு தாய், மகனுக்கு வெட்டுக்காயம்

கல்வியங்காட்டுப் பகுதியில் உறவினர்களிடையே ஏற்பட்ட தகராறின்போது - நபர் ஒருவர் தாயையும், மகனையும் பலமாக வெட்டி காயப்படுத்தினார்.

இந்தச் சம்பவம் நேற்று கல்வியங்காடு மூன்றாம் கட்டைப் பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தின்போது 12 வயதான பாலச்சந்திரன் முரளிகாந், 50 வயதான பாலச்சந்திரன் சீதாலட்சுமி ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - உறவினர்களிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நெருங்கிய உறவுமுறையுள்ள ஒருவர் மேற்படி இருவரையும் கடுமையாக வெட்டி காயப்படுத்தினார்.

## விபத்தில் யுவதி காயம்

மானிப்பாய் பகுதியில் ஹயேஸ் வானும், சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் யுவதி ஒருவர் காயமடைந்தார்.

இந்த சம்பவம் நேற்று மானிப்பாசந்திக்கு அண்மையாக இடம்பெற்றது. சம்பவத்தின்போது ராசா ஜினிதா (வயது 19) என்பவரே காயமடைந்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மானிப்பாய் வீதியூடாக சைக்கிளில் யுவதி சென்றுகொண்டிருந்தபோது, பின்புறமாக ஹயேஸ் வாகனம் மோதியதிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர் யாழ் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## புற்றுநோயாளர்களுக்கு நிதியுதவி வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

லண்டன் சிவயோகம் அறக்கட்டளை நிதியத்தின் உதவியுடன் யாழ்.மாவட்டத்திலுள்ள புற்றுநோயாளர்களுக்கு நிதியுதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் கண்சிகிச்சை நிபுணர் வைத்தியர் குகதாஸன் மற்றும் வைத்தியசாலை கணக்காளர் விஜயரகுநாதன் ஆகியோர், இந்த நிதி உதவியை நாளை புற்றுநோயாளர்களிடம் கையளிக்கவுள்ளனர்.

யாழ்.போதனாவைத்தியசாலைக் கணக்காளர் அலுவலகத்திலேயே இந்த நிதிவழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. அண்மையில் லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு ஆன்மீக சொற்பொழிவை நிகழ்த்திய செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் வேண்டுதலின் பேரிலேயே லண்டன் சிவயோக அறக்கட்டளை நிதியம் இந்த உதவியை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதியுதவியைப் பெறவிரும்பும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் தமது மருத்துவ அட்டையுடன் யாழ்.போதனாவைத்தியசாலையின் கணக்காளரிடம் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நிறஞ்சனாஸ் சங்கானை
முரளி, கௌசல்யா நடித்த
காலமெல்லாம் காதல் வாழ்க
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
EHPOSURE
(சி-2621)

## வீடியோ காட்சி

யாழ். பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை பி.ப 3 மணிக்கு பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் வோல்ரர் ஸாலெஸ் (Walter salles) எனும் பிரபல நெறியாளர் இயக்கிய 'சென்றல் ஸ்ரேசன்' (Central Station) எனும் ஸ்பானிய மொழித் திரைப்படம் ஆங்கிலத்துணைத் தலைப்புகளுடன் காண்பிக்கப்படவுள்ளது.

பிறேசில் நாட்டு வாழ்க்கைத் தளத்தை பின்னணியாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்தப்படம் 1998 ஆம் ஆண்டுக்குரிய சிறந்த பிறமொழித்திரைப்படத்திற்கான ஒஸ்கார் விருதினைப் பெற்றதாகும்.

## முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப்போட்டி

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் உள்ள சம்புக்குளம் முன்பள்ளி சிறுவர்களின் விளையாட்டுப்போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இன்று மாலை இரண்டு மணிக்கு சம்புக்குளத்தில் அமைந்துள்ள கஜந்தா முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் சிறார்களின் விளையாட்டுப் போட்டி நடைபெறவுளளது.

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
சூர்யா,
மாதவன்,
மீராஜாஸ்மின்,
ஈஷா நடித்த

ஆய்த எழுத்து
(சி-2622)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க இன்றுமுதல்
விஜய், திரிஷா,பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி

காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)
(சி-2623)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் 03.07, 04.07 ஆகிய தினங்களில் யாழ்.பொதுவிளையாட்டரங்கில் நடத்தப்படவுள்ள இளையோர் தேசிய தடகள விளையாட்டு விழாவின் ஒழுங்குகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மெய்வல்லுனர்கள் தொழில்நுட்ப அலுவலர் பரீட்சையில் சித்தியெய்திய அலுவலர்கள் யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற விளையாட்டு அலுவலர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன் இலவச ஆங்கில நேரடி வகுப்பு ஒரு மணிநேரத்தில் முழுமையாக ஆங்கிலத்தில் கதைக்க முடியும்

சந்தேகம் வேண்டாம் இதுவரை இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்டோர் பயிற்சி பெற்று நிரூபிக்கப்பட்ட பாடநெறி

இடம் : றிமர் மண்டபம் (TRIMMER HALL)
யாழ் மத்திய கல்லூரி அருகில்
காலம் : 26.06.2004, 27.06.2004, 28.06.2004
சனி, ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை

வகுப்புக்கள் (ஏதாவதொரு வகுப்பில் கலந்து கொள்ளலாம்)
காலை 9.00 முதல் 10.00 காலை 10.00 முதல் 11.00
மாலை 2.00 முதல் 3.00 மாலை 3.00 முதல் 4.00
மாலை 4.00 முதல் 5.00 மாலை 5.00 முதல் 6.00
குறிப்பு: ஞாயிறு காலை வகுப்புக்கள் நடைபெறாது

அனுமதி இலவசம்

பாடசாலை மாணவர்கள், பெற்றோர், கணனி உயர்கல்வி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வீட்டுப் பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், பட்டதாரிகள், அரச தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள்.

அனைவரும் கலந்து கொள்ளலாம்

(769)

கலந்து கொள்ளும் அனைவருக்கும் கற்கைநெறி வழிகாட்டியும் கலந்து கொண்டதற்கான சான்றிதழும் இலவசம்

குறிப்பு: கடந்த காலங்களில் வகுப்புக்களில் கலந்து சான்றிதழை பெறாதவர்கள் நேரடியாக வந்து சான்றிதழை பெற்றுக் கொள்ளலாம். எமது பாடநெறிகளுக்கான புத்தகங்கள் கிடைக்கப்பெறாதவர்களும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

Psalm Institute of Engineering and Technology

மிதிவெடி அபாயக் கல்வி வாரம்
யூன் 21 தொடக்கம் யூன் 27 வரை



# பயங்கரவாத தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

செயற்படுத்தாதுவிட்ட பயங்கரவாத ஒழிப்புச்சட்டத்தினை மீண்டும் செயற்படுத்துமாறு அரசிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பொருளாதார கேந்திர நிலையங்கள் மீது தாக்குதல்கள் தொடுப்பதற்கும், பிரமுகர்களைக் கொலை செயவதற்கு எனக் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை கைது செய்வதற்கு ஏதுவாக, பயங்கரவாத ஒழிப்புச்சட்டத்தினை உடனடியாக மீண்டும் அமுல் படுத்துமாறு, பயங்கரவாத ஒழிப்புப் பிரிவின் மூத்த அதிகாரி ஒருவர் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

புலி உறுப்பினர்கள் கொழும்பில் இருப்பதை பாதுகாப்பு அமைச்சுக்கு அறிகைகைள் சமர்ப்பித்திருக்கின்றோம். இதன்மூலம் புலிகளைக் கைது செய்வதானால், அரசு உடனடியாக பயங்கரவாத தடைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக புலிகளைக் கைது செய்வது தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. கொழும்பில் பாதுகாப்பற்ற நிலை நிலவுவதை அரசியல்வாதிகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

பாதுகாப்புப் பிரிவின் கருத்துக்களை கேட்டறியாது, நோர்வே சமாதான குழுவினரால் தயாரிக்கப்பட்ட தடை ஒப்பந்த நிபந்தனையினால், எந்தவித தடையுமின்றி கொழும்பை புலிகள் ஆக்கிரமிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

கொழும்பு நகரில் பாதுகாப்பை பலப்படுத்தவென, மோட்டார் சைக்கிள் பிரிவினரை ஈடுபடுத்துவதனால் எந்தவித பயனும் இல்லை. அனைவருக்கும் தெரியும் வகையில் புலிகள் கிளைமோர் குண்டுகளையும், கரும்புலித் தாக்குதல் அங்கிகளையும் கொண்டுவருவதில்லை.

எனவே, கொழும்பு நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமெனில், பயங்கரவாத தடைச்சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அவர் மேலும் கோரியுள்ளார்.

## ரயில்வே திணைக்களம் நவீனமயப்படுத்தப்படும்

(கொழும்பு)

இலங்கை ரயில்வேத் திணைக்களத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

மக்களுக்கு அதிகரித்த போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக ரயில்வே திணைக்களம் நவீனமயப்படுத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் ரயில்வே திணைக்களம் புனரமைப்புச் செய்யப்படவிருப்பதாகவும், இதன் மூலம் பொதுமக்களின் போக்கு வரத்துப் பிரச்சினைக்குரிய தீர் வைப் பெற்றுத்தரமுடியும் என போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## சவுதி அரேபியா அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி

கடந்த மாதம் சவுதி அரேபியாவில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நஷ்டஈட்டுக் கொடுப்பனவை வழங்க முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இரு இலங்கையர்களினதும் குடும்பத்தவர்களுக்கு, ஆயுட்கால உதவியையும், ஏனையவர்களுக்கு நிதி உதவியையும் வழங்கவுள்ளதாக வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

### வருடாந்த பொதுக்கூட்டம்

தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்கத் தலைவர் நா.சிவநாதன் தலைமையில் சங்கப் பணிமனையில் இடம்பெறவுள்ளது. (91)

# மேல் மாகாண சபையில் எமக்கு பத்து ஆசனங்கள்

## ரவூப் ஹக்கீம் கூறுகிறார்



எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் மேல்மாகாணத்தில் தாம் பத்து ஆசனங்களைப் பெறுவோம் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள மேல்மாகாணசபைத் தேர்தலில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துத் தேர்தலில் போட்டியிடவுள்ளது.

இந்தத் தேர்தலில் பத்து ஆசனங்களைப் பெறுவோம். இதன்மூலம் மேல்மாகாணசபையில் பலம் வாய்ந்த சக்தியாக இருக்கும் மத்திய அரசாங்கத்தில் மட்டுமன்றி, மாகாணசபையின் நிர்வாகத்தையும் தீர்மானிப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸுக்கு முடியும் என்பதை நிரூபிப்போம் என்றும் ஹக்கீம் சவால் விடுத்தார்.

# கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறின் ஒருமாதத்துக்கு தொடர் வேலை நிறுத்தம்

## ரயில்வே ஊழியர் சங்கம் எச்சரிக்கை

ரயில்வே ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கத்தவறின், ஒரு மாதத்துக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அனைத்து ரயில்வே ஊழியர்களின் பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் சுமதிபால மானவடுகே தெரிவித்தார்.

ரயில்வே திணைக்களத்தை ரயில்வே அதிகார சபையாக மாற்றுவதற்கு போக்குவரத்து அமைச்சு எடுத்துள்ள தீர்மானம் ரத்துச் செய்தால், ஊழியர்களை நிரந்தரமாக்குதல், இடமாற்றங்கள், வெற்றிடங்களை நிரப்புதல், நலன்புரிப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக இன்று புகையிரத ஊழியர்களின் பொது ஊழியர் சங்கத்தின் தூதுவர்கள் போக்குவரத்து அமைச்சரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

## மன்னாரில் அமைக்கப்படவிருக்கும் விகாரை

மன்னாரில் விகாரை ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் நாட்டப்பட்டது.

நேற்றுமுன்தினம் பகல் 11 மணியளவில் மன்னார் - சவுத்பார் வீதியில் அமைந்துள்ள காணியொன்றிலேயே விகாரைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த அடிக்கல்லினை வண. அல்கோ தம்பரத்னதேரர் நாட்டினார். இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம், மனனார் நகர பொலிஸ் பொறுப்பதிகாரி ஐ.பி.பிரேமசிறி உட்படப் பலர் கலந்துகொண்டனர். 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தப் பகுதியில் விகாரையொன்று இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (201)

# விபத்துக்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டம் அமுல்படுத்தப்படும்

இலங்கையில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டம் ஒன்று அமுல் படுத்தப்படவுள்ளதாக- போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கலாநிதி ஜெயவீர தெரிவித்தார்.

தகுதியற்ற வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டமையே வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கான காரணம் எனத் தெரிவித்த அவர் -

வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழ்கள் வழங்கும் சில நிலையங்கள் -பணத்திற்காகத் தகுதியற்ற வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ்களை வழங்கி வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் மீளப்பெறப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த இரண்டு நாடகளில் மட்டும் பல விபத்துச் சம்பவங்கள் இடபெற்றுள்ளன.(01)

# இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இந்தியா நிதியுதவி வழங்கவுள்ளது

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா உதவிபுரியவுள்ளதாக - இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் நிருபம சென் தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களுக்குப் புத்தகங்களை அன்பளிப்புச் செய்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு இந்தியக் கலாசார மையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பல புத்தகங்கள் பல்கலைக் கழகங்களுக்காக கையளிக்கப்பட்டன.

கொழும்பு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்கள் மட்டுமன்றி, தென்கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்திக்கும் உதவப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

# சம்பளம் மற்றும் ஒய்வூதியம் தொடர்பாக தேசியக் கொள்கை வகுக்கத் தீர்மானம்

அரசாங்கம் தேசிய ரீதியில் சம்பள மற்றும் ஓய்வூதிய கொள்கையொன்றை வகுப்பதற்கு ஏற்பாடுகளை செய்துவருகின்றது.

அரசாங்கம் ஏற்கனவே இவ்வாறான ஒரு உறுதிமொழியை வழங்கியிருந்த போதும், அதனை உடனடியாக அமுல்படுத்த முடியவில்லை. எனவே, விரைவில் இதற்கான முன்னெடுப்பை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பாக தேசியக் கொள்கையை வகுத்தபடியால், ஒவ்வொரு அரசாங்கமும் மாறி மாறி ஆட்சிக்கு வரும்போது, சம்பளம் தொடர்பாக பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இதனால் நாட்டில் வேலை நிறுத்தங்களும், போராட்டங்களும் இடம் பெறுகின்றது.

எனவே, இதனைத் தடுப்பதற்காகத் தேசியக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

1994 ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சிக்கு வந்தபோது, இதற்கான முன்மொழிவு வழங்கப்பட்டபோதும், அதன் பின்னர் வந்த காலப்பகுதியில் இது சரியாக அமுல்படுத்தப்படவில்லை.

இதனால்தான் ஊழியர் சங்கப் போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (01)

# குற்றவாளிகளை இனங்காண அமெரிக்காவிடமிருந்து உதவி

(கொழும்பு)

இலங்கையில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும், குற்றவாளிகளை விரைவில் அடையாளம் காண்பதற்கும் ஏதுவாக அமெரிக்காவின் உதவி பெறப்படவுள்ளது.

இது தொடர்பாக அண்மையில் நீதி அமைச்சின் செயலர் சுகத் கம்லத் - அமெரிக்க நீதிமன்ற வைத்திய அதிகாரிகள் குழுவினரைச் சந்தித்துப் பேசசுவார்த்தையொன்றை நடத்தினார்.

இலங்கையில் குற்றவாளிகளை இணங்காணும் தொழில் நுட்பங்களில் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே, குற்றவாளிகள் குற்றங்களிலிருந்து தப்பிக்கொள்ளும் அதேநேரம், குற்றங்கள் தொடர்பான வழக்குகளும் பின்தள்ளி வைக்கப்படுகின்றன.

இது நாட்டின் நீதித்துறையைப் பாரிய அளவில் பாதிக்கும் என்பதால், உடனடித் தீர்வைக் காணுவதற்கு நீதியமைச்சு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. (01)

# தொழில் வாய்ப்புக்கு விண்ணப்பித்த பட்டதாரிகளிடம் சத்தியப் பிரமாண உறுதிமொழி கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளை அரச திணைக்களங்களுக்கு நியமிப்பதற்கு ஏதுவாக அரச மற்றும் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றுகிறார்களா அல்லது தொழிலற்று இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு, விண்ணப்பதாரிகளினால் சத்தியப் பிரமாண உறுதிமொழி சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அரசாங்கத்தால் கோரப்பட்டுள்ளது.

இந்த உறுதிமொழிகள் அடங்கிய படிவங்கள் விண்ணப்பதாரிகளின் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைப்பதற்கான பணிகள் கடந்த 22 ஆம் திகதிமுதல் முகாமைத்துவ திணைக்களத்தினால் மேற்கொளளப்பட்டு வருவதாக நிதியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வேலையற்ற பட்டதாரிகளால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் திறைசேரியின் முகாமைத்துவ சேவைப் பகுதிக்கு கிடைத்துள்ளது.

சத்தியப்பிரமாணப் படிவத்தினை உரியமுறையில் பூரணப்படுத்தி, சமாதான நீதிவான்மூலம் உறுதிப்படுத்தி, பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைத் திணைக்களம், 3 ஆவது மாடி, திறைசேரி, கொழும்பு - 01. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு திறைசேரி அனைத்து விண்ணப்பதாரிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (01)

# அலிசாகிர் மௌலானாவின் இடத்துக்கு மயோன் முஸ்தபா நியமிக்கப்படவுள்ளார்

பதவி விலகிய ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானாவுக்குப் பதிலாக மயோன் முஸ்தபாவை நியமிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் -

அலிசாகிர் மௌலானாவின் இடத்துக்கு மாயோன் முஸ்தபாவை நியமிப்பது தொடர்பான அறிவித்தல், தேர்தல் ஆணையாளருக்குக் கொடுககப்பட்டிருப்பதாகவும், அவர் மயோன் முஸ்தபாவை ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிப்பர் எனவும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவை பாதுகாப்பாக கொழும்புக்கு அழைத்துச் சென்றமை தொடர்பான குற்றச்சாட்டுக்களின் பேரில் அலிசாகிர் மௌலானா நேற்றுமுன்தினம் தனது நாடாளுமன்றப் பதவியை இராஜினாமாச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

# மரணப் போராட்டத்தில் தோற்று காலிறுதி வாய்ப்பை இழந்தது ஜேர்மனி



ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் 'டி' பிரிவின் இறுதிப் போட்டியில் வென்றுவிடவேண்டும் என்ற வெறியோடு அபாரமாக விளையாடிய போதும், ஜேர்மன் அணி 1:2 என்ற அடிப்படையில் செக் குடியரசிடம் தோல்வியடைந்தது.

ஏற்கனவே இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று 'டி' பிரிவில் இருந்து காலிறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தது செக். குடியரசு. ஆனால், ஒரேயொரு போட்டியில் சமநிலை பெற்று ஒரு புள்ளியுடன் இருந்த ஜேர்மன் அணிக்கு அது வாழ்வா? சாவா? என்ற வகையில் அமைந்தது.

போட்டியின் ஆரம்பம் முதலே இரு அணி வீரர்களினதும் ஆட்டம் அபாரமாக இருந்தது.



குறிப்பாக ஜேர்மன் அணியினர் அபாரமாகப் பந்தைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கூடியநேரம் வைத்திருந்து விளையாடினர்.

முதல் பாதி ஆட்டத்தில் ஜேர்மன் அணி வீரர் பலக் பினெட்றிவர் முதலாவது கோல் அடித்து தமது அணிக்கு நம்பிக்கையூட்டினார்.

ஜேர்மன் அணியினரின் மகிழ்ச்சி நீண்ட நேரம் நீடிக்கவிலை. பதிலுக்கு செக். குடியரசு வீரர் ஹெயின்ஸ் 29 ஆவது நிமிடத்திலேயே கோல் அடித்து அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார்.

ஜேர்மன் வீரர்கள் முரட்டுத் தனமாக ஆடி கோல் அடிக்க முயன்றதால், மூன்று வீரர்கள் மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டு நடுவரால் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சமமாக இருந்ததால், இரண்டாவது பாதி ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது. ஜேர்மன் வீரர்கள் கோல் அடிக்க முற்பட்டபோது அது வெற்றி அடையவில்லை.

இந்த நிலையில் 75 ஆவது நிமிடத்தில் செக். குடியரசு வீரர் மிலன் பரோஸ் ஒரு கோல் அடித்தார். இதன்மூலம் மீண்டும் செக்.குடியரசு முன்னிலை பெற்றது. ஜேர்மன் அணியினர் பலத்த முயற்சிகள் செய்தும் வெற்றிபெறவில்லை.

இதனால் 2:1 என்ற அடிப்படையில் செக். குடியரசு வெற்றிபெற்றது.

இந்தப் போட்டி குறித்து பலத்த எதிர்பார்ப்பு உருவாகியிருந்ததால் சுமார் 46 ஆயிரத்து 849 ரசிகர்கள் அரங்கில் குழுமியிருந்தனர்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம செக். குடியரசு மூன்று லீக் போட்டியிலும் வெற்றிபெற்று - 9 புள்ளிகளைப் பெற்ற ஒரே நாடு என்ற தகுதியை அடைந்தது.

இதேவேளை, ஜேர்மன் அணி ஒரு போட்டியில் கூட வெற்றிபெறாமல் ரசிகர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஹொலன்ட், லிபியாவுடனான போட்டிகளைக்கூட ஜேர்மனி சமனிலையில்தான் முடித்தது.

1972, 1980, 1986 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய கிண்ணத்தைக் கைப்பற்றிய ஜேர்மனி இந்தச் சுற்றுப் போட்டியில் கால் இறுதிக் குக்கூடத் தகுதி பெறவில்லை.

# லத்வியாவை வெற்றி கொண்டு ஹொலன்ட் அணி காலிறுதிக்குள்!

(லிஸ்பன்)

காலிறுதிப் போட்டிக்குள் நுழைந்து விட வேண்டும் என்ற வெறியுடன் களத்தில் இறங்கிய ஹொலன்ட் அணி - லத்வியாவை ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் 'டி' பிரிவில் இறுதி லீக் போட்டியில் வெற்றிபெற்றது.

'டி' பிரிவில் இன்னொரு போட்டியில் செக். குடியரசு வெற்றிபெற்றதால் - இந்தப் போட்டி ஹொலன்ட் அணிக்கு மரணப்போராட்டமாக



இருந்தது.

சுமார் 30 ஆயிரம் பார்வையாளர், அரங்கில் இந்தப் போட்டியைக் காண்பதற்காகக் குழுமியிருந்தனர்.

பெரும்பாலான நேரம் பந்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ஹொலன்ட் அணியினர் அபாரமான தாக்குதல் ஆட்டத்தை ஆடி னர். ஹொலண்ட் வீரர்களின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாமலும் தற்காப்பு ஆட்டம் ஆட முடியாமலும் லத்விய அணி பெரிதும் திணறியது.

முதல் பாதி ஆட்டத்தில் 27 வது நிமிடத்தில் ஹொலண்ட் வீரர் ரூட்வன் நிஸ்டல் ரூய் தமது அணிக்காக முதலாவது கோலை அடித்தார்.

இதன் பின்னர் 35 ஆவது நிமிடத்தில் இன்னொரு கோலை டுட்வன் நிஸ்டல் ரூய் ஹொலன்ட் அணி சார்பில் அடித்து வெற்றிக்



கான பாதையைத் திறந்துவிட்டார்.

முதல் பாதி ஆட்டத்தில் லத்விய அணி மிகவும் சோர்ந்த நிலையில், இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஓரளவு தற்காப்பு ஆட்டத்தை கையாண்டனர்.

ஆயினும் பந்தைக் கோலாக மாற்றும் அளவுக்கு லத்விய வீரர்களிடம் வேகம் போதவில்லை. ஆட்ட நேரம் முடிவை நோக்கி நெருங்கிக்கொண்டிருந்தபோது 84 ஆவது நிமிடத்தில் ஹொலன்ட் அணியின் றோய் மக் காய் ஒரு கோலை அடித்தார்.

இதன் பின்னர் லத்விய அணியால் கோல் எதையும் அடிக்கமுடியாமல் போனதுடன், கால் இறுதிக்குள் நுழையும் கனவும் தகர்ந்து போனது. முடிவில் ஹொலன்ட் அணி 3:0



என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்கான வாய்ப்பைப் பெற்றுக்கொண்டது.

## 'யூரோ - 2004' அணிகளின் நிலை

'யூரோ - 2004' உதைபந்தாட்டத் தொடரில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பெறும் அணிகள் காலிறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறும். இந்த அடிப்படையில் 'ஏ' பிரிவில் போர்த்துக்கல், கிரீஸ், 'பி' பிரிவில் பிரான்ஸ், இங்கிலாந்து, 'சி' பிரிவில் சுவீடன், டென்மார்க், 'டி' பிரிவில் செக். குடியரசு, ஹொலன்ட் ஆகிய அணிகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன. லீக் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் அணிகள் பெற்ற புள்ளிகள் விபரம் வருமாறு :

| அணி | போட்டி | வெற்றி | டிரா | தோல்வி | கோல் | புள்ளி |
|---|---|---|---|---|---|---|
| **பிரிவு 'ஏ'** | | | | | | |
| போர்த்துக்கல் | 3 | 2 | - | 1 | 4 | 6 |
| கிரீஸ் | 3 | 1 | 1 | 1 | 4 | 4 |
| ஸ்பெயின் | 3 | 1 | 1 | 1 | 2 | 4 |
| ரஷ்யா | 3 | 1 | - | 2 | 2 | 3 |
| **பிரிவு 'பி'** | | | | | | |
| பிரான்ஸ் | 3 | 2 | 1 | - | 7 | 7 |
| இங்கிலாந்து | 3 | 2 | - | 1 | 7 | 6 |
| குரோஷியா | 3 | - | 2 | 1 | 4 | 2 |
| சுவிட்சர்லாந்து | 3 | - | 1 | 2 | 1 | 1 |
| **பிரிவு 'சி'** | | | | | | |
| சுவீடன் | 3 | 1 | 2 | - | 8 | 5 |
| டென்மார்க் | 3 | 1 | 2 | - | 4 | 5 |
| இத்தாலி | 3 | 1 | 2 | - | 3 | 5 |
| பல்கேரியா | 3 | - | - | 3 | 1 | 0 |
| **பிரிவு 'டி'** | | | | | | |
| செக். குடியரசு | 3 | 3 | - | - | 7 | 9 |
| ஜேர்மன் | 3 | - | 2 | 1 | 2 | 2 |
| ஹொலன்ட் | 3 | 1 | 1 | 1 | 6 | 4 |
| லத்வியா | 3 | - | 1 | 2 | 1 | 1 |

# டென்மார்க் - சுவீடன் போட்டி எந்தவித சந்தேகமும் இல்லை!

## ஐரோப்பிய உதைபந்தாட்டக் கூட்டமைப்பு

டென்மார்க், சுவீடன் அணிகளுக்கு இடையில் சமநிலையில் முடிவடைந்த போட்டியில் சந்தேகத்திற்கு இடமான விடயங்கள் எதுவும் கிடையாது என்று ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

போர்டோ நகரில் நடைபெற்ற அந்தப் போட்டி 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்ததால், இரு அணிகளுமே யூரோ கோப்பை காலிறுதிக்குத் தகுதி பெற்றுவிட்டன.

இதனால், பல்கேரிய அணியுடனான மற்றொரு போட்டியில் 2:1 என்ற கோல் கணக்கில் வென்றும் கூட இத்தாலி அணியால் காலிறுதிகக்குத் தகுதிபெற முடியாமல் போனது.

இது திட்டமிட்ட சதி என்று இத்தாலிய அணியின் கோல் கீப்பர் உட்பட வீரர்கள் அனைவரும் குற்றம் சாட்டியிருந்தார்கள். இந்த நிலையில் இந்தப் போட்டி இயல்பாகவும், நேர்மையாகவும் நடைபெற்ற போட்டி எனவும், அதில் சந்தேகப்படுவதற்கு ஒன்றுமில்லை எனவும் ஐரோப்பிய கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பின் செய்தித் தொடர்பாளர் நாப் பால்க்கெனர் தெரிவித்தார்.

அத்துடன், அந்தப் போட்டி குறித்து மறு விசாரணை நடத்துவது தேவையற்றது எனவும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

இத்தாலி அணியின் பயிற்சியாளர் ஜியோவான்னி ட்ராபோட்டோனியும், டென்மார்க் - சுவீடன் இடையேயான போட்டி குறித்து புகார் எதுவும் செய்யப்போவதில்லை என்று அறிவித்து அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

### சர்ச்சைகள் கிளப்பும் சுவீடன் - டென்மார்க் ஆட்டம்!

ஐரோப்பிய உதைபந்தாட்ட கிண்ணத்துக்கான போட்டியில் 'சி' பிரிவில் கடைசி லீக் ஆட்டத்தில் சுவீடன் - டென்மார்க் மோதின. இந்த ஆட்டம் 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

இதனால், இரு அணிகளும் கால் இறுதிக்கு முன்னேறின. இதேபோல் 5 புள்ளிகள் பெற்ற இத்தாலி கோல் விகித அடிப்படையில் வாய்ப்பை இழந்தது.

சுவீடன் - டென்மார்க் ஆட்டம் முடிவு முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டு இருக்கிறது என்று இத்தாலி வீரர்கள் கருத்துத் தெரிவித்து உள்ளனர்.

இதனால், சூதாட்ட சர்ச்சை கிளம்பியுள்ளது. ஆனால், இதுவரை முறைப்படியான எந்த புகாரும் போட்டி அமைப்பாளர்களிடம் இத்தாலி அணி நிர்வாகம் செய்யவில்லை.

# விம்பிள்டன் போட்டி மழையால் பாதிப்பு!

மழைகாரணமாக விம்பிள்டன் ரெனிஸ் போட்டி நேற்றுமுன்தின ஆட்டங்கள் பாதிக்கப்பட்டன.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரெனிஸ் போட்டி லண்டனில் கடந்த 21 ஆம் திகதி தொடங்கி, நடந்துவருகிறது.

இதில் 3 ஆவது நாளான நேற்றுமுன்தினம் பலத்த மழை கொட்டியது. இதன் காரணமாக மைதானத்தில் தண்ணீர் தேங்கி நின்றது.

நீண்டநேரம் தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

இதனால் 'குடை' பிடித்தபடி காத்துநின்ற ரசிகர்கள் திரும்பிச் சென்றனர். முன்னணி வீரர், வீராங்கனைகள் காயத்தால் பாதிக்கப்பட்டுள்ள விம்பிள்டன் போட்டிக்கு, மழை புதிய தலைவலியைக் கொடுத்து வருகிறது. முதல் நாள் ஆட்டமும் மழையால் பாதிக்கப்பட்டது.

# ஆசிய கிரிக்கெட் கிண்ணத்தை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பெற்றது

ஆசிய கிரிக்கெட் சபை கிண்ணத்தை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி தக்கவைத்துக்கொண்டது. மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் ஆசிய கிரிக்கெட் சபை கிண்ணப் போட்டித் தொடர் நடைபெற்றது. கிரிக்கெட்டை பல புதிய நாடுகளுக்குக் கொண்டுசெல்லும் முயற்சியாக இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

ஆசிய கிரிக்கெட் சபை உறுப்பினர்களாகவுள்ள 15 அணிகள் இந்தத் தொடரில் பங்கேற்றன. இறுதிப் போட்டிக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமன் அணிகள் தகுதி பெற்றன. இறுதிப் போட்டி கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய எமிரேட்ஸ் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 253 ஓட்டங்கள் குவித்தது. அடுத்துக் களமிறங்கிய ஓமன் 45 ஓவர்களில் 159 ஓட்டங்களில் சுருண்டது. இதன்மூலம் தொடர்ந்து 3 ஆவது முறையாக ஆசிய கிரிக்கெட் சபை கிண்ணத்தைக் கைப்பற்றியது எமிரேட்ஸ். இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற இந்த இரு அணிகளும் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் அயர்லாந்தில் நடைபெறும் சர்வதேச கிரிக்கெட் சபை கிண்ணப் போட்டித் தொடரில் பற்கேற்கத் தகுதியையும் பெற்றன.

## பாடசாலை கிரிக்கெட் போட்டி

# யாழ். இந்து – பற்றிக்ஸ் அணிகள் அரையிறுதிக்குள் நுழைந்தன!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் - அரையிறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் தகுதியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி என்பன 'ஏ' பிரிவிலும் - 'பி' பிரிவில் இருந்து யாழ். மத்திய கல்லூரியும் தகுதிபெற்றுள்ளன.

அரையிறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் தகுதியினை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அல்லது யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் பெறவுள்ளது.

இதேவேளை, யாழ். இந்துக் கல்லூரி - அஸ்ரா போட்டியில் கலந்துகொள்ளாமையால் அஸ்ரா கிண்ண இரண்டாம் சுற்றுக்கு 'ஏ' பிரிவில் இருந்து சென். பற்றிக்ஸ் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி என்பனவும்,

'பி' பிரிவில் யாழ். மத்திய கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி என்பனவும் தகுதி பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (58)

# அரச சாராயம் விற்றவர்கள் தண்டப்பணம் செலுத்தினர்

அனுமதிப்பத்திரம் இல்லாது அரசாங்க சீல் இடப்பட்ட சாராயத்தை விற்பனை செய்த 11 பேருக்கு எதிராக யாழ். சிறுகுற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

மானிப்பாய், யாழ்ப்பாணம், கொக்குவில், கோப்பாய், இராசாவின் தோட்டம், அரியாலை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, ஒன்பது பேரிடமிருந்து 3 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், மூன்று பேரிடமிருந்து 5 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் அறவிடப்பட்டது. இந்தத் தண்டனையை யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரீ. விக்னராஜா வழங்கினார். (தீ)

# வினைத் திறமைகாண் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(நெடுந்தீவு)

மாகாண அரச சேவையைச் சேர் ந்த அலுவலர்களுக்கான 2004ஆம் ஆண்டுக்குரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவினால் கோரப்பட்டுள்ளது.

அரசாங்க சேவையின் பொது எழுதுநர் சேவை மற்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ள பிறசேவைகள், களஞ்சிய காப்பாளர் சேவை, சிறாப்பர் சேவை, கணக்குப்பதிவுநர் சேவை, மற்றும் தட்டெழுத்தாளர் சேவையின் வகுப்பு IIஆம் தரம் 'அ'லுள்ள உத்தியோகத்தர்கள், சுருக்கெழுத்தாளர் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களே இந்த வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கமுடியும்.

இந்த விண்ணப்பங்கள் யாவும் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கூடாக, எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டுமாத லால் 12.07.2004ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்கு மாறு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் சகல திணைக்களங்கள், அமைச்சுக்கள், சபைகள் போன்றவற்றுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (113)

# கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இளையோருக்கான பயிற்சிப் பட்டறை

பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் கியூடெக் நிறுவனத்தால் இருதினங்கள் முழுநாள் வதிவிடப் பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் ஜுலை மாதம் 3, 4,ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை, ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிவற்றில் இருந்து தலா 15 மாணவர்களை உள்ளடக்கியதாக 50 மாணவர்கள் பங்கு கொள்ளும் இந்த இருநாள் வதிவிடப் பயிற்சிக் கருத்தரங்கில் "உருவாகி உருவாக்கு" என்ற தலைப்பில் கலை நிகழ்வுகள், கருத்துரைகள், போட்டிகள், திரைப்படக் காட்சியும் இடம்பெறவுள்ளது.

தரம் 10, 11 சேர்ந்த மாணவர்கள் பங்குகொள்ளும் நிகழ்வுகளில் முதல் நாள் கருத்துரையினை அருட் சகோதரர் ரவிச்சந்திரன் "நான் யார்" - எனும் விடயம் தொடர்பான சுய ஆய்வினை மேற்கொள்ளவுள்ளார்.

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பல செயற்திட்டங்கள் முன்னெடுப்பு

எதிர்வரும் யூலை 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை உள்ளூராட்சிவார நிகழ்வுகள் நல்லூர்ப் பிரதேச சபையினால் நடாத்தப்படவுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் பொதுச் சந்தைகளைச் சிரமதானம் செய்தல், இந்து மயானங்களைத் துப்பரவு செய்தல், மரநடுகைத் திட்டங்களை மேற்கொள்ளல், முன்பள்ளிச் சிறுவர்களுக்கு இலவச பற்பசை வழங்குதல், புலமைப்பரிசில் நன்கொடைகள் வழங்குதல், சிறந்த சனசமூக நிலையங்கள் சிறந்த உணவு விடுதிகளைத் தெரிவு செய்தல் மற்றும் சுற்றாடல் பேணல் ஆகிய செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலகத்தில் புத்தகக் கண்காட்சி ஒன்றும் இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியின் போது நூல்கள் பற்றிய விளக்கங்களும் வழங்கப்படவுள்ளது.

# நெடுந்தீவு மாவிலித்துறைமுகப் பகுதியில் படகேற்றும் தளம் அமைககப்படவுள்ளது

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவிலித்துறைமுகப் பகுதியில், நெடுந்திவு பல.நோ.கூ. சங்கதிற்கு சொந்தமாக படகு ஏற்றும் தளம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

படகு ஏற்றும் தளம் ஒன்று, படகுகள் திருத்த வேலை நிமித்தம் ஏற்றி இறக்குவதில் ஏற்படும் சிரமங்களை நிவர்த்திக்கவும், சேதங்களைத் தவிர்க்கவும் ஒரு தளம் அவசியம் தேவைப்படுவதனால், அதனை அமைக்கும் தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற பல. நோ. கூ. சங்க பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பல. நோ.கூ.சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (113)

# மக்கள் நலன்புரி சங்கமும் படையணியும் தென் இலங்கைக்கு கல்விச் சுற்றுலா

மக்கள் நலன்புரி சங்கமும் படையணியினரும் எதிர்வரும் 2ஆம் திகதி முதல் தென்னிலங்கைக்கு கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

மக்கள் நலன்புரி சங்கத்தின் 17ஆவது கல்விச் சுற்றுலாவாக அமையவுள்ள இந்தச் சுற்றுலாவின்பொழுது -கண்டி, நுவரெலியா, கொழும்பு போன்ற இடங்களில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடுவதுடன், நாடாளுமன்ற கட்டட தொகுதியையும் பார்வையிடவுள்ளனர்.

150 மாணவிகளும் 10இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் கலந்து கொள்ளவுள்ள இந்தச் சுற்றுலாவுக்கான ஏற்பாடுகளை மக்கள் நலன்புரி சங்க சுற்றுலா ஏற்பாட்டு குழு மேற்கொண்டு வருகின்றது. (58)

## நெடுந்தீவு அரச அதிபர் பணிமனையில்

# வெளிக்கள உத்தியோகத்தர்கள் இன்மையால் அபிவிருத்திப்பணிகள் பெரும் பாதிப்பு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கு எவரும் நியமிக்கப்படாமையினால், அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதில் பெரும் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் போன்ற பதவிகளுக்கு உரியவர்கள் கடந்த சில வருடங்களாக நியமிக்கப்படவில்லை.

தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கபடாமையினால் அலுவலகத்தில் மேற்கொள்ள வேண்டிய, மற்றும் அப்பிரதேசத்தில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பான மதிப்பீடுகள், வேலை முன்னேற்றங்கள் தொடர்பாக எதனையும் உடனடியாக மேற் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நெடுந்தீவில் கடந்த பல வருடங்களாக கலாசார உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படாமையினால், பாரம்பரிய கலையினை வளர்ப்பதில் பெரும் நெருக்கடி ஏற்படுவதுடன், இந்து ஆலயங்களில் பூசைகள் இடம்பெறாமல், நிர்வாகச் சிக்கல்கள் நிறைந்து காணப்படுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. (113)

## சின்னஞ் சிறு செய்திகள்

### வருடாந்த மஹோற்சவம்

நல்லூர் மூத்த விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜுலை 3ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெற்று நிறைவுபெறும். (101)

### ஞானச்சுடர் வெளியீடு

(வடமராட்சி)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானசுடர் ஆன்மீக மாதாந்த சஞ்சிகை, இன்று பிற்பகல் 10.30 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளையும், மதிப்பீட்டுரையை சிவஸ்ரீ தி. சோமஸ்கந்தராஜக் குருக்களும் நிகழ்த்தவுள்ளனர்.

### தேசிய எழுச்சிப் பேரவை சங்கம நிகழ்வு

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வொன்று சனிக்கிழமை மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்திலே நடைபெறவுள்ளது. தாயக நேரப்படி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்த சங்கம நிகழ்வில் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையில் மாவட்ட, கோட்ட, பிரதேச, ஊரக பேராளர்கள் அனைவரும் கலந்துகொள்ளவுள்ளனர். (94)

### விளையாட்டு போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் தமது பொன் விழாவையொட்டி மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், கயிறு இழுத்தல் போன்ற விளையாட்டுக்களை நடாத்தவுள்ளனர்.

இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம், செயலாளர். எனும் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு விளையாட்டுக் கழகச்செயலாளர் க.ஞானச்சந்திரன் தெரிவித்துள்ளார். (12)

### தமிழ்த் தின போட்டிகள்

பருத்தித்துறைக் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையேயான தமிழ்த் தினப்போட்டிகள் வட இந்து மகளிர் கல்லூரியில் எதிர் வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். (12)

### ஆங்கிலத் தினப் போட்டிகள்

பருத்தித்துறைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கிலத் தினப்போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், தவிர்க்க முடியாத காரணத்தால் போட்டிகள் அன்றைய தினம் காலை 9 மணிக்கு வடமராட்சி இந்துக் மகளிர் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (12)

# குன்றும் குழியுமாகக் காணப்படும் வேலணை - ஊர்காவற்றுறை வீதி

(நெடுந்தீவு)

வேலணை துறையூர் சந்தியில் இருந்து -ஊர்காவற்றுறை நோக்கிச் செல்லும் பிரதான வீதி பல இடங்களில் திருத்தம் செய்யப்படாமல் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

வேலனை அம்பிகை நகர் பகுதியில் வீதிகள் பெரும் சேதமடைந்துள்ளது. பெரியபாலமும் சேதமடைந்துள்ளதனால் பயணிகள், மற்றும் தனியார் வாகனங்கள் அப்பாலத்தினூடாக பயணிக்காமல் அருகிலுள்ள புற்தரையூடாக பயணத்தை மேற்கொண்டு வருகிறது.

அரச அதிகாரிகள் பாதையின் நிலைமையை நேரில் பார்த்து, அதனால் ஏற்படக்கூடிய விபத்துக்கள், உயிர்ச் சேதங்களை தடுக்கும் வகையில் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டுமென அந்தப் பாதையூடாக போக்குவரத்தில் ஈடுபடும் வாகன உரிமையாளர்களும், பொது மக்களும் கோரியுள்ளனர். (113)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, தெரிவு செய்யப்பட்ட சிறந்த சனசமூக நிலையங்களுக்கான வெற்றிக் கேடயத்தை யாழ். மாநகர சபை ஆணையாளர் வழங்கிக் கௌரவிக்கின்றார்.

# கடற்தொழிலாளர் சங்கங்களை இணைத்து சமாசம் அமைப்பதற்கு நடவடிக்கை

(ஆழியவளை)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை இணைத்து, மாவட்ட மட்டத்தில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம் ஒன்றை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மாவட்ட மட்டத்தில் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த மாவட்டத்தில் உள்ள கண்டாவளை, கரைச்சி, பூநகரி, பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள கடற்றொழில் சங்கங்களை ஒன்று சேர்த்தே இந்த சமாசம் அமைக்கப்படவுள்ளது.

சமாசம் அமைக்கப்படுவதன் மூலம், கடற்றொழிலாளர்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுப்பது இலகுவானதாக இருக்கும் என -கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார். (122)

# ஓய்வுபெற்று பல வருடங்களாகியும் சேமலாபநிதி கிடைக்கவில்லை

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் தொழில்நுட்ப உதவியாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற ஊழியர் ஒருவருக்கு, பல வருடங்களாகியும் இதுவரை ஊழியர் சேமலாப நிதி வழங்கப்படவில்லை என, யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை கந்தர்மடத்தினை சேர்ந்த கே.கருணாகரன் செய்துள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபையில் தொழில்நுட்ப உதவியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றபின் ஊழியர் சேமலாப நிதியைப் பெறுவதற்கு உரிய அதிகாரசபைக்கு விண்ணப்பித்த போது, அந்த நிதி உரிய ஊழியருக்கு வழங்கப்பட்டுவிட்டது என தெரிவிக்கப்பட்டது. ஆனால், அந்த நிதி மேற்படி நபருக்கு வழங்கப்படாமல் மட்டக்களப்பில் உள்ள கருணாகரன் என்னும் பெயர் உடைய நபருக்கே வழங்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

இந்த விடயம் தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியத்துக்கு முறைப்பாடு செய்தும் இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லை என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தீ)



# சிநேகிதியே

இளம் பருவம் என்பது ஒரு அற்புதமான பருவம். பகலும் இல்லாத இரவும் இல்லாத அந்திப்பொழுது எப்படி அழகானதோ... அப்படித்தான் பெண்களைப் பொறுத்தவரை குழந்தையுமில்லாத, பெரியவர்களாகவும் இல்லாத இரண்டுங்கெட்டான் வயது. மனதில் எண்ணப் பூக்கள் மலரத் தொடங்குகின்ற வயது என்று இளம் பருவத்தைப் பற்றி வர்ணிக்கிறார்கள் மனித உறவு அறிவியலாளர்கள்.

'தான் இன்னும் அம்மா மாதிரி பெரிய ஆளாகவில்லை...' அதே நேரம் சின்னப்பிள்ளையும் இல்லை என்பது அவளுக்குப் புரியும்.

ஆனால், என்னவோ புதிதாக இருக்கிறதே நேற்று வரையிலும் தங்கச்சி, தங்கச்சி என்று பாசமாகப் பழகிய அண்ணனின் நண்பன்கூட, திடீரென வேற ஏதோ மாதிரி எம்மை பார்க்கின்றாரே என உறுத்தல் வருகின்றது. தினமும் தானே வாசலில் நிற்கின்றேன். அம்மா ஏன் திடீரென கத்துகின்றாள் எனக் கேள்வி எழுகின்றது. எதுக்கெடுத்தாலும், அம்மா கத்துகின்றாள் என இளம்பருவப் பெண்கள் சண்டை செய்யாததும் இந்த வயசிலேதான்.

மனநல ரீதியாக இந்தப் பருவம் எப்படி என்று பார்த்தால், கொஞ்சம் விபரீதமான பதில் கிடைக்கின்றது. எதிலேயுமே ஒரு நிலையான புத்தி இல்லாத பருவம் என்று இதைச் சொல்லலாம்.

இந்த நேரத்தில் அதிரடி கொள்ளைக்காரி பற்றிய படம் நல்லாய் ஓடினால், தானும் அப்படி ஒருபெண்ணாக மாறவேண்டும் எனத் தோன்றும். கொஞ்ச நாட்களின் பின் குனிந்த தலை நிமிராமல் ஒரு நண்பி திரிந்தால் அப்படி இருக்கலாமென எண்ணங்கள் திசை மாறும். இப்படி ஏகப்பட்ட தடுமாற்றங்கள் நிறைந்த பருவம் என்கிறார்கள் மனநல மருத்துவர்கள்.

ஏன் இந்தத் தடுமாற்றங்கள்?

இவை எப்படி நிகழ்கின்றன?

இதன் விளைவுகள் என்ன?

எல்லாம் வயதுக் கோளாறு என்பார்கள். உண்மையில் கோளாறு செய்வது வயதல்ல, ஓமோன்கள்தான் என்று இளம் பருவத் தடுமாற்றங்களுக்கு அறிவியல் ரீதியான விளக்கம் தருகிறார்கள்.

உடலில் ஓமோன்களால் திடீர் மாற்றங்கள் நிகழும்போது, அவளது உள்ளத்தைக் கவனிக்கவேண்டிய பொறுப்பு தாய்மார்களுக்குத்தான். சொல்லப் போனால், பிஞ்சுக் குழந்தையாக அவள் இருந்தபோது, எவ்வளவு கவனமாகவும், அக்கறையும் காட்டி வளர்த்தார்களோ அதே கவனமும், அக்கறையும் இந்தப் பருவத்தில் தேவை.

பிஞ்சுப் பருவத்தையும், இளம் பருவத்தையும் ஒருவகையில் ஒப்பிடமுடியும். படுத்தே கிடக்கும் குழந்தை சில நாட்களில் தாயின் முகம் பார்த்துச் சிரிக்கிறது. அடுத்து கையைக் காலை அசைக்கிறது. அடுத்த சில மாதங்களில் உட்காருகிறது, தவழ்கிறது, நடக்கிறது அதன் பின் ஓடவே தொடங்கிவிடுகின்றது.

இதேபோன்ற திடீர், திடீர் வளர்ச்சி மீண்டும் மிகக் குறுகியகால இடைவெளியில் மனித வாழ்வில் ஏற்படுவது இந்த இளம் பருவத்தில் தான் என்று விளக்கம் தருகின்றார்கள். உண்மைதான் - பெண்ணின் வளர்ச்சி பனைமரம் மாதிரி என்பார்கள். மறைவிடங்களில் ரோமம் வளரத் தொடங்கும். உடல் அங்கங்களில் இன்னும் சில மாற்றங்கள் காணப்படுகின்றது. சில ஓமோன்களின் சுரப்பி, திடீரென்று மிகவும் அதிகரிப்பதால்தான் இந்த மாற்றங்கள். இப்போதெல்லாம் பெண்கள் பருவமடையும் வயது மிகவும் குறைந்து விடுகின்றது. சில குழந்தைகள் ஒன்பது வயதிலேயே பூப்படைந்து விடுகின்றார்கள். இதனால் ஒன்பது வயதிலேயே உடலியல் மாற்றங்களுக்கு விளக்கங்களைக் கொடுக்கத் தொடங்கினாலும் தவறில்லை என்கின்றார்கள் ஓமோன் சிறப்புமருந்துவர்கள்.

இந்த நேரத்தில் தாய் தன் குழந்தையை அழைத்து, அருகில் இருத்தி அவளுக்கு என்ன நடக்கப் போகின்றது. ஏன் இந்த மாற்றங்கள் என்பதை எடுத்து சொல்லவேண்டும். தாய் அதைக் கூறுவதற்குத் தயங்கினால் யாரிடம் போய் அவள் தெரிந்து கொள்வாள்? சங்கடப்படாமல் அவள் பெரியவளாகிக் கொண்டிருப்பது பற்றியும், இந்த மாற்றங்கள் இயற்கைதான் என்பது பற்றியும், செக்ஸ் பற்றியும் விளக்கம் கொடுக்க வேண்டும். இது வளர்ச்சியின் அடுத்த கட்டம். இதில் வெட்கப்பட எதுவும் இல்லை என்பதைப் புரிய வைக்க வேண்டும்.

இந்தச் சமயத்தில் அம்மாவால்தான் தன் மகளிடம் மிகவும் நெருங்கமுடியும். இதுதான் என்று சொல்லிவிட்டால் அதன் மேல் இருக்கும் சுவாரஸ்யம் குறைந்து, படிப்பில் அவள் கவனம் திரும்பிவிடும். பயந்துபோய் நிற்கும் குழந்தைக்கு எதுவும் சொல்லாமல் விட்டுவிட்டால் அதுவே பெரிய கேள்வியாகி பதில் தேட ஆரம்பிக்கின்றது. அது சில சமயங்களில் விபரீதங்களிலும் முடியலாம் என்று வளர் இளம் பருவ சிறப்பு மருத்துவர்கள் விளக்கம் தருகின்றனர். ★



# பூ பூக்கும் வயது

# உணவில் அளவு மட்டுமல்ல போஷாக்கும் இருக்கவேண்டும்

பச்சிளங் குழந்தைகள் நன்றாக வளரத் தாய்க்கு நல்ல உணவு தேவை. சிறு குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு இறப்பதற்கு முக்கிய காரணம் - வேண்டிய அளவுக்கு ஊட்டச் சத்துள்ள உணவு இல்லாமமையே. முன்னேறிக் கொண்டிருக்கும் மூன்றாவது உலகத்தில் சிறுகுழந்தைகள் இறப்பதற்கு முக்கிய காரணம் - தாய்க்கு வேண்டிய, தேவையான, உணவு இல்லாமையே இலங்கையின் மக்கள் தொகையில் பெரும்பாலான மக்கள் ஏழைகளாகவே வாழ்கின்றனர்.



அவர்களுக்கு உண்ண உணவில்லை, உடுக்க உடை இல்லை, தங்குவதற்கு வீடில்லை இவ்வாறு வாழும் மக்களுக்கு உணவு வேண்டியளவு கிடைப்பதில்லை. இந்த நிலையை ஆராயும் பொழுது கர்ப்பிணிப் பெண்கள், தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்கள் மற்றும் 12 வயதுவரையுள்ள குழந்தைகள் ஆகியோருக்கு பாதுகாப்பும், தகுந்த உணவுகளும் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும்.

பொதுவாகவே பெண்களுககு அதிகளவிலான உணவு தேவைப்படுகின்றது. கருத்தரிக்கும் முன்னரே வளர்ச் சியின் உச்சக் கட்டத்தை அடைந்திருக்க வேணடும். இதனால் தான் பெண்களுக்குச் சிறு வயதிலேயே திருமணம் செய்து வைபபதை நம்மவர்கள் ஆதரிப்பதில்லை. உணவின் அளவு மட்டும் உயர்ந்து பயனில்லை. உணவின் தரமும் உயர்வாக இருக்கவேண்டும்.

ஒரு பெண்ணுக்குத் தினமும் 2000 கலோரி உணவு தேவையென்றால், கர்ப்பிணிப் பெண்ணுக்கு 2300 கலோரி உணவு தேவைப் படுகின்றது. தாயின் வாழ்க்கைச் சுற்றுப் புறத்தையும், அவர்களது கலாசாரத்தையும் பொறுத்திருக்கிறது. அதுபோல் வீட்டில் இருப்பவரின் அறிவுரைகளும், மருத்துவரின் அறிவுரைகளும் கர்ப்பகாலத்தில் மிகவும் அவசியம். எம்மைப் பொறுத்தவரையில் 2300 கலோரிக்குப் பதிலாக 1400 கலோரி உணவு தான் கிடைக்கிறது எனக் கணிப்பீடு.

தாய்க்கு அதிக உணவு கிடைக்கவில்லையென்றால், வயிற்றில் வளரும் குழந்தை நன்றாக வளராமலேயே பிரசவகாலம் முடிந்து விடுகின்றது. ஆகவே, இதனால் குறைமாதக் குழந்தை உருவாக வாய்ப்பு ஏற்படுகின்றது.

மனிதன் பிறக்கும் பொழுதே சாதாரணமாக பிறந்தால்கூட, குறைப்பிரசவமாகத்தான் பிறக்கிறானோ என நாம் எண்ணுகிறோம். ஏனெனில், ஆடுகள், மாடுகள், கோழிகள் பிறந்தவுடன் தாமாகவே நடந்து சென்று உணவைத் தேடிக் கொள்வதைப் காண்கிறோம். பறவைகள்கூட உடனேயே பறந்து திரிய ஆரம்பிக்கின்றன.

ஆனால், மனிதன் மட்டும் பிறந்தவுடன் - நடக்கவும் முடியாமல், பேசவும் தெரியாமல் அழுகிறான். வேறொரு மனிதன் தான் அந்தக் குழந்தையை வாரி எடுத்து, வேண்டிய உணவுகளை ஊட்டி வளர்த்தும், பின் பேச, எழுதக் கற்றுக்கொடுக்கின்றான்.

இவ்வாறான மனித பிறப்பிற்கு வேண்டிய ஊட்டச்சத்துள்ள உணவு கிடைக்காமையினால், உடல் வளர்ச்சி நிலையில் மாற்றங்கள் ஏற்படக் காரணமாகின்றதால், ஊட்டச்சத்து நிறைந்த உணவு வகைகளையே நாம் தேர்ந்தெடுத்து உண்ண வேண்டியவர்களாகவுள்ளோம்.

இந்த ஊட்டச்சத்தின் மூலமே எமது உடல் வளர்ச்சி மட்டுமல்ல, மூளை வளர்ச்சியும் கூடத் தங்கியுள்ளது. ✳

# சிநேகிதிக்கு ஒரு மடல்



அன்புள்ள சிநேகிதியே,

தூரத்திலும் உன் அன்பின் சாரத்திலும் இருக்கும் உன் தோழி எழுதிக் கொள்வது. நண்பியே கடந்த உனது மடல் கண்டு உள்ளத்தில் ஆயிரம் சந்தோஷ அலைகள். காரணம் நீ ஒரு மடலுக்குப் பதிலளிக்கத் தாமதித்தமையால், நான் ஏதோ அதிகம் எழுதியதால் தான் நீ பதிலளிக்கவில்லை என எண்ணிப் பயந்துவிட்டேன்.

அதுசரி - நண்பியே சின்னத்திரையும், சினிமாவும் - அன்னையாகவும், சக்தியாகவும் தமிழர் தம் பண்பாட்டிலே போற்றப்படும் பெண்மையை இழிவுபடுத்துவதாகக் காரசாரமாக எழுதியிருந்தாய். உனது கருத்தில் உண்மை இருக்கத்தான் செய்கின்றது. அதற்காக அனைத்துத் தொலைக்காட்சி நாடகங்களும் அப்படியானவை என்பது ஏற்றுக் கொள்ளமுடியாது.

இன்று குடாநாட்டில் ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சித் தொடர்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் வெளிக்காட்டப்படுகின்றன என்பதையும் நீ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

சரி நண்பியே, நான் ஒன்றை உனக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன். இயேசு பிரான் ஒருமுறை - தன் சீடர்களைப் பார்த்து, "முதலில் உன் கண்ணிலுள்ள துரும்பினை எடுத்துப் விட்டு, உன் சகோதரன் கண்ணிலுள்ள துரும்பினை எடுத்துவிடு" என்றார். இதை இன்று உனக்கு நான் கூறுகிறேன்.

இன்று சமூகம் பெண் மையை எவ்வாறு போற்றுகின்றது என்பது பற்றி நீ சிந்தித்தாயா?

முன்னொரு காலத்தில் குடாநாட்டில் இரவு பன்னிரெண்டு மணிக்குக்கூட கன்னியர்கள் காவலன் ஒருவனின்றி தனித்துச் செல்லக்கூடிய நிலைமை இருந்தது. ஆனால் இன்று வயோதிபப் பெண் ஒருவர்கூட பட்டப் பகலில் தனித்துச் செல்லமுடியாத நிலைமை தோன்றியிருப்பது உனக்குத் தெரியாதா?

ஹீரோ கொண்டாக்களிலும், ரீ.வீ.எஸ் மோட்டார் சைக்கிள்களிலும் கையடக்கத் தொலைபேசி சகிதம் சினிமாப் பாணியில் வலம்வரும் குடாநாட்டு இன்றைய இளைஞர்கள் (எல்லோரும் அல்ல) கட்டிளம் பெண்களைப் பார்த்துககூறும் வார்த்தைகள் என்ன? பெணமையைப் போற்றும் வார்த்தைகளா?

இன்று உங்கள் மத்தியில் பெண்ணை ஏதோ காட்சிப் பொருட்களாகவும், போகப் பொருட்களாகவும் எண்ணும் இளைஞர் கூட்டம் ஒன்று வளர்ந்து வருவதை உனக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

அண்மையில் குடாநாட்டு நீதிமன்றம் ஒன்றில் யுவதிகளைக் கெட்டவார்த்தைகளால் ஏசும் இளைஞர்களைக் கைதுசெய்யும்படி உத்தரவிட்டதைப் பத்திரிகைகளில் படித்திருப்பாய் என நினைக்கிறேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக உங்களது சமூகத்தில் படித்த மேதைகள் என்று, தம்மை அடையாளம் காட்டிக் கொண்டு, அன்னை என்றும், ஆதி சக்தி என்றும் ஆரோக்கியமாகக் கோஷமிடும் பசுந்தோல் போர்த்த ஓநாய்கள் சில, கட்டிக்காக்கப்படவேண்டிய பெண்மையை சீரழிப்பது உனக்குத் தெரியாதா? பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் நீ இது பற்றி அறியாதிருக்க நியாயமில்லை.

நண்பியே சின்னத் திரைபற்றி எழுத முற்பட்டு, சீரழிந்துப்போகும் உங்கள் கலாசாரம் பற்றி எழுதிவிட்டேன் போல் தெரிகின்றது. ஆனால், எழுதியவை ஒன்று உண்மைக்குப் புறம்பல்ல எனக் கூறி முடிக்கின்றேன்.

*அன்புள்ள சிநேகிதி*

*லெஸ்லினா*

# பிஞ்சுமுகத்தின் தேடல்

இன்றைக்கு எனக்கு மனசு சரியில்லை. எல்லோரும் மகிழ்ச்சியாக விளையாடுகிறார்கள். நான் மட்டும் தனியாகப் பலாமரத்தில் சாய்ந்துகொண்டு நிற்கின்றேன். இன்னும் சிறிது நேரத்தில் வழிபாட்டுக்குப் போகவேணும். அது ஒன்றுதான் எனக்கு இதுவரை விருப்பமானதாக இருந்தது. ஆனால், இன்றைக்கு.... பொத்தென்று ஏதோ எனக்கு அருகே விழுந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். ஒரு பெரிய பலாப்பழம்... விழுந்த வேகத்தில் அப்படி சிதறிக்கிடந்தது. கூழன்பழம். அதாலை ஒருவரும் சாப்பிடுவதில்லை. கீழே கிடந்த பழத்தின் சிதைந்த கோலம் என் நினைவில் அடைந்து கிடந்த உணர்வலையைத் திறந்துவிட, நான் என்னை மறந்து உணர்வலையால் எடுத்துச் செல்லப்பட்டேன்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் எல்லோரும் பாடசாலை முடிய வரிசையாக இல்லத்துக்கு வந்து கொண்டிருந்தோம். தெருவைக் கடந்தால் எங்கள் இல்லம். பசிக்களையுடன் எல்லோரும் விரைந்து வந்து கொண்டிருந்தோம். எங்கள் இல்லத்தில் 150 பேர் இருக்கின்றோம். எல்லோரும் பெண்கள். 6 வயதிலிருந்து 18 வயது வரையானவர்கள் சேர்ந்து வாழ்கின்றோம். உணவுக்கும், உடைக்கும் குறைவில்லை. கல்வியும் கிடைத்தது. ஆனால்... எங்களுக்கு ஏதோ ஒன்று மட்டும் இல்லை என்று தெரிந்தது... அதை எங்களுக்கு வாய் விட்டு விளக்கமாக சொல்லத் தெரியவில்லை. பள்ளிக்கூடத்திலே இருக்கும்போது மனதில் பாரமில்லை.

ஆனால், இல்லத்துக்குள் நான் தேடுவது கிடைக்கவில்லை... மீரா அக்காவை - நான் இல்லத்திலே சேர்ந்தபோது, முதன் முதலாக கண்டபோது... அவவுடைய முகத்திலே அப்பிக்கிடந்த சோகம் என் மனதைச் சுட்டது. அக்காவின் பார்வையிலும் வெறுமை. யாரோடும் அதிகம் பேசமாட்டாள். நான் அவளோடு சேர்ந்து பழக எண்ணி, அவளை நெருங்கிய போது அவள் கண்களில் பட்டுத்தெறித்த ஒளி, அதைக்கண்ட நான் மெல்ல அருகில் சென்று அக்கா! என்று மிக மெல்லிய குரலில் கூப்பிட்டேன். அவள் என்னைத் திரும்பிப் பார்த்தாள். அந்தப் பார்வையின் தேடலை நான் உடனே உணர்ந்து கொண்டேன்.. "அக்கா விளக்குமாற்றைத் தாருங்கள்! நான் கூட்டுகின்றேன்!" என்று நான் கேட்டபோது, மீரா அக்கா ஒன்றும் பேசவில்லை. விளக்குமாற்றைக் கீழே வைத்தாள். இதே பலாமரத்தின் அடியில் வந்து இருந்தாள். நான் ஓடிப்போய் கீழே கிடந்த விளக்குமாற்றை எடுத்து முற்றத்தைக் கூட்டினேன். அந்த புதிய வேலை எனக்கு அவ்வளவு பழக்கமான வேலை அல்ல. இருந்தாலும், அக்காவுக்கு ஏதாவது உதவிசெய்து அவளைச் சந்தோஷப் படுத்த வேண்டும் என்ற வெறி என்னுள் புகுந்து, என்னை இயக்கியது. நான் கூட்டிமுடியும் வரை அக்கா கண்ணை மூடி ஏதோ யோசித்துக் கொண்டிருந்தாள். நான் குப்பையையும் அள்ளி, உரப்பையில் போட்டு, உரிய இடத்தில் வைத்துவிட்டு கையையும் கழுவினேன். என் உள்ளங்கையெல்லாம் சிவந்து நோவெடுத்தது. சட்டையில் கையைத்துடைத்துக் கொண்டு, மீரா அக்காவுக்குக்கிட்ட வந்தேன். அவள் கண்கள் மூடியிருந்தாலும், கடை விழிகளில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. என் மனம் பதற, அக்காவைப் பார்த்தேன். அவள் கண்ணைத் திறக்கவில்லை. அக்காவின் அருகில் போய் அவள் தோளைத் தொட்டேன். அவ்வளவுதான்!... அக்கா என் மடியில் விழுந்து அழுதாள். அக்காவின் அழுகைக்கான காரணம் எனக்குப் புரிந்தது...... அவள் முதுகை நான் தடவிக் கொண்டே, நான் சொன்னேன்! அக்கா! நான் முற்றம் கூட்டி முடித்துவிட்டேன். குப்பையை எங்கே கொண்டு போய்ப்போடுவது? அக்கா சட்டென்று கண்ணைத் துடைத்துக்கொண்டு எழுந்தாள். என் கையைப் பற்றி உள்ளங்கையை விரித்துப் பார்த்தாள். சிவந்த கையைத் தன் கன்னத்தில் ஒற்றினாள். என் உடலெங்கும் மகிழ்ச்சி பிரவாகித்து ஓடியது.



இல்லத்துக்கு வந்த ஒரு மாதகாலமாக நான் தேடியது!.... இன்று என் கண்ணில் பட்டது. முகமறியாத என் அம்மாவின் கரங்களை நான் மீரா அக்காவின் கைகளில் உணர்ந்தேன். குப்பையை இருவருமாகத் தூக்கிக்கொண்டு போய் வீசியபோது, இருவரும் எங்கள் மனப்பாரங்களையும் சேர்த்து வீசி எறிந்தோம். மீரா அக்கா இப்போது வாயைத்திறந்தாள். 'உன்ரை பேரென்னடி!' எனக்கு அந்தக்குரலில் இருந்த கடுமை..... விசித்திரமாக இருந்தது. அக்காவின் கைகளில், கன்னத்தில் இருந்த மென்மையைக் குரலில் காணவில்லையே! நான் சற்றுப் பயந்தகுரலில் 'கவிதா' என்று சொன்னேன். அக்கா சிரித்துக்கொண்டே சொன்னாள். 'என்னடி குரங்குதரச் சொல்லிறியே'! எனக்கு ஒன்றும் விளங்கவில்லை அக்கா பெரியவள் பெரிய வகுப்புப்படிக்கிறாள். நான் ஆண்டு மூண்டுதானே படிக்கிறன்! நான் பேசாமல் நின்றேன். நான் பகிடிக்குச் சொன்னனான். 'கவி' எண்டால் குரங்கு எண்டு பொருள். கவிதா! எண்டால் குரங்கு தா எண்டுதானே விளக்கம்! அக்கா விளக்கமாகச் சொன்னபோது சிரிப்பு என்னையும் வந்து தொற்றிக் கொள்ள நானும் சிரித்தேன்.

மீரா அக்காவும் நெருங்கிய தோழிகளாகிவிட்டோம். அக்காவின்ரை அப்பாவும் அம்மாவும் 'ஷெல்' அடித்துச் செத்துப் போனார்களாம். அவள் சொன்னாள் 'கீழே விழுந்த பலாப்பழம் போலச் சிதறிக்கிடந்த அப்பாவையும் அம்மாவையும் நான் கடைசியாகப் பார்த்தேன். நான் பெரியம்மாவோடை தோட்டத்துக்குப் போனதால் தப்பிவிட்டேன். பெரியம்மாதான் என்னைப் பரிவுடன் வளர்த்தாள். ஆனால், பெரியப்பா சரியான குடிகாரன். வேலை வெட்டிசெய்யாமல் திரிந்தார். பெரியம்மா புல்லுப் பிடுங்கிற வேலைக்குப் போய்க் கொண்டு வாற கூலிக் காசிலைதான் எல்லாம் செய்யவேணும்.

என்னை அவளால் பாதுகாப்பாக வளர்க்க முடியாது எண்டு இந்த இல்லத்திலை கொண்டுவந்து சேர்த்தாள்.... எனக்கு இஞ்சை இருக்க விருப்பமில்லை. பெரியம்மாவோட இருக்கத்தான் விருப்பம். அக்கா கதையைச் சொல்லும்போது எனக்கும் அழுகைவந்தது. அடக்கிக்கொண்டு அக்காவைப் பார்த்தேன்! அவள்முகத்தில் ஏதோ திட்டம் எழுதிக்கிடந்தது.

நேற்று முதல்நாள் நடந்த சம்பவம்..... மீரா அக்காவை பெரிதும் பாதித்தது. இலலப்பராமரிப்பாளர் அவளுக்குச் சொன்னது அவளைப் பத்திரகாளியாக்கிவிட்டது. அவள் செய்த செயல் எல்லோரையும் பிரமிக்கவைத்தது.

மீரா அக்கா பராமரிப்பாளருக்குப் பட்டென்று கன்னத்தில் அடித்த போது, என் மனம் நெருப்பில் விழுந்திருந்த மீரா அக்காவின் மனத்தைப் புரிந்து கொண்டது. மீரா அக்கா... என்னசெய்யப் போகிறாள்? நான் விக்கித்து நிற்க... இல்லத்தை விட்டு தலைதெறிக்க ஓடினாள்.

அவளுக்கு அவள் செய்கை அவமானத்தைத் தர அவள் ஓடினாள். அவளைத் தொடர்ந்து இல்லப் பராமரிப்பாளரும் ஓடினார். தெருவில் இந்த ஓட்டத்தைச் சிலர் பார்த்து ரசித்தனர்.

ஆனால், நாங்கள்... மீரா அக்காவுக்கு என்ன நடக்குமோ என்று பயந்தோம். சிறிது நேரத்தில் மீரா அக்காவை மீண்டும் இல்லத்துக்கு அழைத்து வந்தார்கள். அக்காவின் முகத்தில் ஒரு வாட்டம். மீண்டும் உடைந்த ஒரு பலாப்பழமாக அவள் எனக்குத் தோன்றினாள்.

இன்று மீரா அக்காவை அவளுடைய பெரியம்மா வந்து கூட்டிச்சென்று விட்டா. நான் அப்போது பாடசாலையில் இருந்தேன். அதனால், அக்காவைச் சந்திக்கவில்லை.

ஆனால், பலாமரத்தடிக்கு வரும்போது அக்காவின் நினைவுவரும். 'குரங்கு தா' என்ற அவள் குரல் என் காதில் கேட்கும்! மனதில் சுரீர் என்று ஒரு வேதனை பிறக்கும்.

வழிபாட்டு மணியோசை.... கேட்க நான் நினைவலைகளின் பிடியிலிருந்து வெளியே வந்தேன். இன்று மணிவாசகர் குருபூசை!.... 'அழுதால் உன்னைப் பெறலாமே....' என்று அவர் பாடினாராம். நானும் வழிபாட்டு மண்டபத்தில் மீரா அக்காவை நினைத்து மௌனமாக அழுதேன். குத்து விளக்கிலிருந்து ஒரு பொறி கீழே விழ என்மனம் அதைப்பற்றி எண்ணத்தொடங்கியது.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# குடும்பங்களிடையே மகிழ்ச்சியை தோற்றுவிக்கும் பண்டிகைகள்

எமது கலாசாரத்தில் - பண்டிகைகளுக்கு முக்கிய இடமுண்டு. ஏனெனில், மதங்களும், மதங்களை ஒட்டிய பண்டிகைகளும் நம் கலாசாரத்தில் ஊடுருவி நிற்கின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும் - தாய் தன் மருமகளுக்கும், மகளுக்கும் பண்டிகைகளின் சிறப்புக்களை எடுத்துக் கூறுகின்றாள். பெண்கள் இல்லாத வீடுகளில் பண்டிகைகள் சிறப்பதில்லை.

பண்டிகைகளுக்கான பொருட்கள் வாங்குவதுடன், ஆண்களின் கடமை முடிந்துவிடுகின்றது. ஆனால், பண்டிகை தினங்களில் ஒரு குடும்பத் தலைவியின் பொறுப்புக்களும், கடமைகளும் மகத்தானவை. வேலைச்சுமை அதிகரித்தாலும், அவற்றை இன்முகத்துடனும், புன்சிரிப்புடனும் ஏற்று, திறம்பட நடத்தி, பண்டிகைகளை மகிழ்ச்சியோடு கொண்டாடி, தன்னைச் சார்ந்தவர்களை மகிழ்விக்கின்ற இயல்பை கொண்டவளே சரியான குடும்பத்தலைவியாவாள்.



பெண்கள் - கணவனை அலுவலகத்துக்கும், குழந்தைகளைப் பாடசாலைக்கும் அனுப்புவது, அல்லது தான் அலுவலகத்தில் வேலை பார்க்கும் இல்லத்தரசிகளாக இருந்தால், அரக்கப்பரக்க வீட்டுவேலைகளை முடித்துவிட்டு, தங்கள் அலுவலகம் செல்வது இயந்திரத்தனமான வாழ்க்கையில் ஒரு மாறுதலையும், சுவையையும், மனதுக்கு ஓய்வையும், மகிழ்ச்சியையும் அளிக்கின்றன நம் பண்டிகைகள்.

பண்டிகை நாட்களில் வேலைப்பளுவை நினைத்து, குடும்பத்தலைவிகள் அதிகம் அலட்டிக்கொள்ளாமல், வளர்ந்த குழந்தைகளைத் தனக்குச் சிறுசிறு வேலைகளில் உதவும்படி பழக்க வேண்டும். பெண் குழந்தைகளைக் கோலம் போடுதல், பூப்பறித்தல், பூத்தொடுத்தல், பூஜைக்குத் தயாராகப் பூஜைப் பொருட்களை எடுத்து வைத்தல், உணவு பரிமாறுதல் போன்ற வேலைகளில் ஈடுபடுத்தலாம். ஒவ்வொரு பண்டிகையின் சிறப்பு என்ன! ஏன் நாம் இந்தப் பண்டிகைகளைக் கொண்டாடுகின்றோம் என்பதைக் குழந்தைகளுக்குத் தாய் எடுத்துச் சொல்லும்போது, அவர்களுக்குத் தானாகவே ஒரு ஈடுபாடு வந்துவிடுகின்றது. இதனால் மாவிலையை நான்தான் கட்டவேண்டும் என்று மகன் மாவிலையைப் பறிப்பதற்கு ஓடுகின்றான்.

பண்டிகைத் தினங்களில் பளிச்சென்ற உடைகளை உடுத்தும், நகைகளை அணிந்தும், தலையில் பூவும் சூடி, புன்னகையுடன் குடும்பத்தலைவி திகழ்ந்தால், அதைப் பார்ப்பவர்களுக்கும் மகிழ்ச்சி பூக்குமே! ஆகவே, கொஞ்சம் சிரத்தையுடன் தன்னை அலங்கரித்து கொள்ளவேண்டிய கடமையும் அவர்களுக்கு உண்டு.

அடுத்ததாக - சுமுகமான சூழ்நிலையை பண்டிகை நாட்களில் உருவாக்குவதும் குடும்பத் தலைவியே. குழந்தைகளிடமும், கணவரிடமும், மற்றவர்களிடமும் அனுசரணையுடன் நடந்து கொண்டு, எந்தச் சிறு விடயத்தையும் பெரிதுபடுத்தாமல் விட்டுவிட்டால் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவுமல்லவா? முக்கியமாகப் பிரச்சினைகள் எதையும் பற்றி பண்டிகை நாட்களில் விவாதிக்காமல் இருப்பது நல்லது. அப்படி எதிர்பாராமல் ஏதாவது பிரச்சினைகள் தோன்றிவிட்டாலும்கூட, அவற்றை மறுநாள் விவாதித்துக் கொள்ளலாம் என்று ஒத்திப் போடவும்.

உறவினர்களோடு கலந்து மகிழவும் பண்டிகைகள் நமக்கு வாய்ப்பைக் கொடுக்கின்றன. வீட்டைவிட்டு உயர் கல்விக்காகவோ, வேலைக்காகவோ வேறு இடங்களுக்குச் சென்றுள்ள பிள்ளைகள், சகோதரிகள், பெற்றோர்களுடன் பேசி மகிழ பண்டிகை நாட்களில் ஒன்று சேர்கின்றனர்.

பண்டிகைத் தினங்களில் கோயிலுக்குப் போகும் பழக்கத்தை குடும்பத்தலைவி பின்பற்றுவதனால், அவள் குழந்தைகளும் திரைப்படங்களைப் பார்க்கச் செல்வதற்குப் பதிலாகக் கோயிலுக்குச் போகலாமே என்று தோன்றும். ✸

# மன அழுத்தத்துக்கு மருந்து

எங்களுக்கு துன்பம் அல்லது மன அழுத்தம் ஏற்படும்போது, அதனை இன்னொருவருடன் மனம்விட்டுக் கதைப்பதன்மூலம், அந்த அழுத்தத்திலிருந்து எம்மால் விடுபட முடியும். இதனை அனுபவங்கள்மூலம் பலதடவைகள் கண்டிருக்கின்றோம். இந்த விதமாக வெளியேற்றப் படாமல், உள்ளடங்கி இருக்கும் உணர்வுகள், மனம் பலவீனப்படும் வேளைகளில் ஆவேசத்துடன் வெளிப்படலாம். இந்த வெளிப்பாடு ஆக்ரோசமான நடத்தையையோ அல்லது ஏதேனும் உடல் நோயாகவோகூட இருக்கலாம்.



குறிப்பாக - குழந்தைப் பருவ வளர்ச்சியில் நிறைவேறாத விருப்பங்கள், இம்சைகள் நனவு நிலையின்றும் நனவிலி நிலைககுத் தள்ளப்படுகிறது என்பது உளவியலாளர்கள் கருத்து.

நனவு நிலையில் அவை நினைவு கூறப்படாவிடினும், நனவிலி நிலையால் அல்லது ஆழ் மனதில் அவை இருந்து கொண்டே இருக்கும். இவற்றை நனவு நிலைக்குக் கொண்டு வந்து அவற்றை முற்றிலும் இல்லாமல் செய்வதே இதினின்றும் விடுபடுவதற்கான வழியாகும்.

இதற்கு ஆழ்மனதிலுள்ள விடயங்களை நனவு நிலைக்குக் கொண்டு வந்து, அவற்றை தங்கு தடையின்றி வெளிப்படுத்த உதவுவது பொருத்தமான செயற்பாடாகும். உள்ளத்தில் அடங்கி இருக்கின்ற உணர்வுகளை, எண்ணங்களை தெளிவான நனவு நிலைக்கு எப்படிக் கொண்டு வருவதென்பதும்? அவற்றைப் பூரணமாக வெளிப்படுத்த எந்தவகையில் உதவலாம் என்பதும் உளவியல்ரீதியில் முக்கியமானது.

மேலும், அவர்கள் கூறும் விடயங்களை இருக்கக்கூடிய இடைவெளிகளைப் பொருத்தமாக நிரப்பி, தொடர்புபடுத்துவதன்மூலம், தெளிவான முறையில் அவர்களை - அவர்களுக்கு விளங்க வைக்கமுடியும். அதன்பின் தாம் யதார்த்தமாக எதிர்கொள்ளும் பிரச்சினையை தீர்க்கக்கூடிய திறனைப் பெறுவர்.

**வாசுகி**

தரிசனம் - நிஜன்



# பாவம் அவர்கள் நமது பிள்ளைகள்

வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் தன்னாலானதை வழங்கிக் கொண்டிருக்கிறது.

அனுபவமாய் அதையெல்லாம் உள்வாங்கிக் கொள்பவன் விழிப்பாயிருக்கிறான். தனது அறிவினால் அதையெல்லாம் மதிப்பீடு செய்து கொள்கிறான்.

அந்த மதிப்பீடுகளோடு தனது வாழ்வைத் தொடர்கிறான்.

வாழ்க்கை தருவதை - இயல்பாய் வாழ்வினூடு வருவதை ஏற்றுக் கொண்டு அடுத்த கட்டத்தைத் திட்டமிட்டுத் தன் வாழ்வை நகர்த்துகிறான்.

கற்பனைகளாலும் கனவுகளாலும் சாத்தியமற்ற எதிர்பார்ப்புகளாலும் ஒரு வாழ்க்கையினை மனதினுள் உருவாக்கி வைத்துக் கொண்டு, அது எதிர்பாராமல் சிதைந்துவிட நேரும் போது மனம் நொந்து புலம்பி 'ஐயோ இப்படி ஆகிவிட்டதே' என்று இடிந்து போய் ஒதுங்கி விடுபவன் தொடர்ந்தும் தோல்விகளையே எதிர்கொள்கிறான்.

இவர்களுள் நாம் யாராக இருக்கிறோம்?

நம்மிற் பெரும்பாலானவர்கள் 'மனமிழந்து ஒதுங்கிவிடும்' ரகத்தினராகவே இருக்கிறோம்.

நமக்கு நிறையவே ஆசைப்படத் தெரிந்திருக்கிறது. ஒரு திட்டமோ தீர்க்கமான ஆராய்தலோ இல்லாமல் எதையோ எல்லாம் நாடிப்போகிறோம். தேடிச் சேர்க்கிறோம்.

காலங்காலமாக நம்மைத் தொடர்ந்து வருகிற பலஹீனமொன்று, நம்மை அடுத்தவரோடு ஒப்பிட்டுப் பார்க்கும் மனப்பாங்கு 'அவன் இப்படி இருக்கிறான் - அவனிடம் இன்னின்னதெல்லாம் இருக்கின்றன. ஆகவே, நானும் அதையெல்லாம் தேடி - அவனைப் போல - முயற்சியிலிறங்குவதைத்தான் ஊக்கமென்றும், 'கெட்டித்தன'மென்றும் கருதுகிறோம். அவ்வாறே எமது அடுத்த தலை முறைக்கும் கற்பிக்கிறொம். 'அங்க பார்' அந்தப் பிள்ளையை 'பள்ளி முடிஞ்சால் டியூசன் - டியூசன் முடிஞ்சால் கொம்பியூட்டர் வகுப்பு - அதுக்குப் பிறகு இங்கிலிஷ் வகுப்பு இப்படி எவ்வளவு முயற்சி பார்த்தியே" என்று சொல்கிற - "பிள்ளையை ஊக்கப்படுத்துகிற" (இப்படித்தான் அவர்கள் கருதுகிறார்கள்) தாயும் தந்தையும் இன்று பரவலாகக் கிடைப்பார்கள். "நீயும் இருக்கிறியே என்னவோ விழுந்து விழுந்து படிச்சாய். கட்டாயம் என்ரர் பண்ணுவன் கம்பஸ் போய் வெட்டி முறிப்பன் எண்டாய் கடையில் ரெண்டு மாக்ஸ் காணாதெண்டு கம்பசுக்கும் போகேல்ல...'

இப்படித்தமது பிள்ளைகளை ஏசுவது தங்கள் கடமையென்று அவர்கள் கருதுகிறார்கள். 'எப்பிடியெண்டாலும் ரோசம் வந்து அவனும் படிக்கட்டும்' எண்டுதானே ஏசினனான். என்று தம் காரியத்தை நியாயப்படுத்துவார்கள்.

பிள்ளைகளைப் படிப்பித்து ஆளாக்குவது என்பது பந்தயத்துக்கு அவர்களைத் தயார்ப்படுத்தி வாலை முறுக்கி விடுவதுதான் என்பது அவர்களது புரிதலாய் இருக்கிறது.

தனது பிள்ளையின் 'இயலும் இயலாதவை'கள் பற்றி அவர்கள் அக்கறைப்படுவதில்லை.

"அந்தப் பிள்ளையும் படிக்குதுதானே இவருக்கு என்ன குறை... ஏன் கொஞ்சம் கடுமையா முயற்சி செய்தால் என்ன..? என்பார்கள்.

கடைசியில் எல்லாம் முனைந்து தோற்று பிடிச்சு வெளியால அனுப்பி விடுவார்கள். ஒன்றுமே சரி வராத பட்சத்தில் அவன்ர தலைவிதி இது நானெண்டால் நான் என்ன செய்ய...? என்று ஒதுங்கிக் கொள்வார்கள்.

சரியான அவதானமும் பிள்ளையின் ஆற்றல் மற்றும் ஈடுபாடு பற்றிய புரிதலும் இல்லாத சூழலில் வாழும் ஒவ்வொரு பிள்ளைக்கும் இன்று இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

இத்தகைய அழுத்தங்களைத் தாங்க முடியாத பிள்ளை மனம் நொந்து ஒடிந்து விடுகிறது. அல்லது எதிர்மறையான வழிகளில் இறங்கித் தன்னை ஏதாவது ஒருவகையில் அடையாளப்படுத்த முனைந்து ஒரு சமூக விரோதியாய் நிமிர்கிறது,

இதற்கெல்லாம் நாம் வேறுவேறு உடனடிக் காரணங்களைக் கூறி விடலாம். ஆனால், அடிப்படையாக சில காரணங்கள் உண்டு என்பதை நாம் மறுக்க முடியாது.

அந்தக் காரணங்களிலொன்று, நாமே நமது பிள்ளைகளை அவர்களின் ஆற்றல்களை இனம் காணாமல் கல்வி தொடக்கம் எந்த விடயத்திலும் எமது விருப்பங்களை அவர்கள் மீது திணிப்பது.

"அடுத்த வீட்டுப் பையன் மெடிசினுக்கு எடுபட்டுப் படிப்பதால் எனது பையனும் மெடிசின் படிக்க வேண்டுமென்று எனக்கு ஆசை. எனது பையன் கெட்டிக்காரன் கணிதத்தில் மிகுந்த திறமைசாலி. அவனுக்குக் கணிதத்துறை தான் விருப்பம். ஆனால், எனக்கு அவன் டொக்டராய் வரவேணுமெண்டு ஆசை எப்படியோ வற்புறுத்தி என்ர மகனையும் மெடிசின் செய்ய வைக்கப்போகிறேன்" என்று புறப்பட்டுப் போகிற அப்பாவை அம்மாவை அப்பாவி என்பதா - அறிவிலி என்பதா? பிள்ளையின் திறமைக்காகப் பெருமைப்படும் நாங்கள் அவனது ஈடுபாடு பற்றியும் ஏன் அக்கறை கொள்வதில்லை.

அவனைப் போல - இவரைப் போல என்று ஒரு ஒப்பீட்டு நோக்கோடு நாம் ஏன் ஒரு தெரிவைச் செய்ய வேண்டும்.

'எனக்கு இது தான் விருப்பம் - இது தான் என்னால் இயலுமென நான் நம்புகிறேன். என்னிடம் இந்தத் திறமை இருக்கிறது. என்று நம்பிக்கையோடு சொல்லும் பிள்ளையின் வெளிச்சங்களை நாம் ஏன் பறித்தெடுக்கிறோம்.

அவனை / அவளை ஏன் கனவுப்பாதாளத்துக்குள் தள்ளுகிறோம்.

தன்னை நம்பும் அவனது முனைப்பின் முனைகளை நாம் ஏன் முறித்துப் போடுகிறோம். நாம் பிள்ளைகளை வளர்க்கிறோமா? அல்லது நம் வசம் இருக்கிற அச்சுக்களுக்கு அமைவாக வார்க்கிறோமா...?

சிந்திப்போம் கண்முன் உள்ள யதார்த்தத்துக்கு முகம் கொடுப்போம். பாவம் அவன் நமது பிள்ளை. நாளை அவன் ஒரு பயனுள்ள பிரஜையாக உருவாக வேண்டும். அவனைப் புரிந்து கொள்வோம். பொறுப்போடு வழிகாட்டுவோம். ஒரு பயனுள்ள மனிதனைச் சிதைக்கின்ற பாவத்தைச் செய்யாதிருப்போம்.

# இந்த வார பலன்கள்

## 25.06.2004 - 01.07.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | சுக் | சூ புத சனி |
| யுரே | 27 ப. 11.40 துல-சந்<br>29 பி.ப. 02.20 விரு-சந்<br>01 பி.ப. 02.15 கட-புத<br>01 பி.ப. 02.26 தனு-சந் | | செவ் |
| நேப் | | | குரு |
| | | கேது | சந் |

### மேடம

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சிறுபிணக்குகள் தோன்றலாம். எனினும் இறுதியில் நிவர்த்தியடையும். பணச் செலவுகள் அதிகமாகும். வருவாய் குறைவாகவே இருக்கும். அன்றாடச் செலவுகளில் சிக்கனம் கடைப் பிடிக்கப்பட வேண்டும். தேகசௌக்கியம் சில நேரங்களில் பாதிக்கடலாம். பிரயாணங்களில் செலவு அதிகமாகும். திருமண முயற்சிகள் தாமத்தின் பின் நிறைவு பெறும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராகவே நடக்கும். மறைமுக எதிரிகளைப் பற்றி அவதானமாக இருக்க வேண்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். பிரயாசைக் கேற்ப வருவாய் கிடையாது. மிதமிஞ்சிய வேலையால் தேகநிலையில் சோர்வு காணும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் பெரிதாக இல்லை.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீடம் 1ம், 2ம் கால்கள்)*

இடபராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் பொதுவாக நன்று. குடும்பஸ்தர்களுக்கு அமைதி வாழ்க்கை நிலவும். பொருளாதார வசதி திருப்தியாக இருக்கும். மனத்தில் தென்பும் உற்சாகமும் காணும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. புத்திரர்களால் உதவியும் மகிழ்ச்சியும் உண்டு. இனபந்துக்கள் உறவு நன்றாக அமையும். திருமணப் பேச்சுக்கள் சற்று தாமதத்தின் மேல் நிறைவுபெற இடமுண்டு. வியாபாரிகளுக்குள் போட்டி பொறாமைகள் நீங்கும். தொழில் சிறபபாக நடக்கும். பணவருவாயும் நன்று. உத்தியோகத்தர்களுக்கு நினைத்தவாறு கருமங்களை ஆற்ற முடியும். அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைகக்கும். உத்தியோக உயர்வு தாமதமடையும். மாணவர்களுக்கு கல்வியில் முற்னேற்றமுண்டு. பரீட்சை பெறுபேறுகள் திருப்தியாக அமையும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*

மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு தொழிற் பலன சிறப்பாக அமையும். குடும்பஸ்தர்களுக்கு மகிழ்ச்சி கிட்டும். புத்திரர்களால் உதவி உண்டு. இனபந்துக்கள் வருகையால் வீட்டில் குதூகலம் காணும். பணவருவாய் அதிகம் பாதிக்காது. தேசுகம் பொதுவாக நனமையாகவே அமையும். எதிர்பார்த்தவாறு கருமங்களைச் சாதிக்க முடியும். திருமணப் பேச்சுக்கள் நற் பலன தரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். கறுப்புச் சந்தை வயாபாரங்கள் கூடுதல் லாபம் தரும். உத்தியோகஸ் தர்களின் அந்தஸ்து உயரும். சம்பள உயர்வும் ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்வி சிறப்பாக அமையும். உயர்கல்வி கற்க வாய்ப்பு உண்டு.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

கடகராசியினருக்கு குடும்ப வாழ்க்கையில் சில சிக்கல்கள் தோன்றும். இடையிடையே மனச்சோர்வு காட்டும். பிள்ளைகளால செலவுகள் அதிகரிக்கும். பணவருவாய் இருந்தாலும் செலவுகள் மீறிச் செல்லும். இதனால் கடன்களும் ஏற்படலாம். தேகாரோக்கியத்தைப் பற்ற கவனம் எடுக்க வேண்டும். மருத்துவச் செலவுகளும் ஏற்படலாம். குடும்பப் பெணகள் மிகுந்த பொறுப்புடன் நடந்து கொள்ள வேணடும். திருமண முயற்சிகள் காலதாமதத்தைக் காட்டும். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் எதிர்பார்த்த லாபத்தைத் தராது. வங்கி உதவிகள் தேவைக்கு உதவாமல் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். பொறுப்புகள் அதிகரிக்கும். அவதானமாகச் செயற்படவும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்து காணப்படுவர். தேவையற்ற விஷயங்களைத் தவிர்க்கவும்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு ஜென்ம வியாழன் நடப்பதால் குடும்பத்தில் அமைதி குன்றும். இனத்தவர்களிடையே தப்பபிப்பிராயங்கள் தோன்றும். பிள்ளைகளால் நற்செய்தி கிடைக்கும். அதனால் ஓரளவு மன நிம்மதி உண்டு பணவரவு இருப்பினும் செலவு கட்டுக்கடங்காமல் போகும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படும். வைத்தியச் செலவுகளும், தலைதூக்கும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப் பிடிக்க வேண்டும். மங்கல கருமங்கள் தள்ளிப்போகும். வர்த்தகர்களுக்கு படிப்படியாக முன்னேற்றம் உண்டு கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. உத்தியோகத்தர்களுக்கு சுகதொழிலாளர்களால் உதவி உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், புரிந்துணர்வும் தேவை.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னிராசியில் ஜனனமானவர்களுக்கு பலவித பிரச்சினைகள் சமாளிக்க வேண்டியிருக்கும். தெய்வ நம்பிக்கை அவசியம். அதனால் ஆறுதல் உண்டு. பணவருவாய் சமாளிக்கக் கூடியதாக இருக்கும். தொழில்துறை நல்ல பலனைத் தரும் தேகாரோக்கியம் பற்றி அவதானம் தேவை. குடும்பப் பெண்கள் அவதானத்துடன் சிக்கனமாக நடக்கவும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நன்று எனினும் செலவு அதிகமாக இருக்கும் வாடிக்கையாளாகளைக் கவர்ந்துகொள்ளுதல் நன்மை தரும். திருமணப் பேச்சுக்கள் காலந் தாழ்த்திக் கொண்டு போகும. உத்தியோகத்தர்களுக்கு வேலை மாற்றங்கள் ஏற்படலாம். அதிகாரிகளின் விருப்பத்திற்கிணங்க செயறபடுவது நன்மையளிக்கும். மாணவர்களுக்கு முன்னேற்றமுண்டு. கடின ஊக்கம் தேவை. பரீட்சையில் சித்தி கிட்டும்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*

துலாராசிக்காரருக்கு வியாழ பகவான் 11இல் சஞ்சரிப்பதால் பல நனமைகள் உண்டு. இல்லறம் சிறப்படையும். குடும்ப அந்தஸ்து உயரும். சுயமுயற்சியால் முன்னேற்றம் காண்பர். வீட்டில் சுபநிகழ்வுகள் நிகழ இடமுண்டு. பணவருவாயில் திருப்தி நிலவும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. பெரியவாகளிடமிருந்து நன்மதிப்பு கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினைகள் வராது. வர்த்தகர்களுக்கு புதிய முதலீடுகள் நல்ல லாபத்தைத் தரும். வங்கி உதவிகளும் கிடைக்கலாம். மங்கல கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வசதியான இடமாற்றங்கள். பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்கள் சிறப்பாக முன்னேறுவர் புலமைப் பரிசில்களும் கிடைக்கலாம்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

விருச்சிகராசியினருக்கு அட்டமத்துச் சனி நடக்கிறது. குடும்பத்தில் அமைதி குறையும் புத்திரர்களால் தொல்லைகள் ஏற்படும். நண்பர்கள் கூட பகமை காட்டுவார்கள். கொடுககல் வாங்கல்களில் பிணக்குகள் தோன்றும். செலவினங்கள் அதிகமாவதால் சமாளிப்பது கடின மாக இருக்கும். இனபந்துக்களுடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம். திருமணப் பேச்சுக்களில் இழுபறி நிலை காணும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாக இருக்கும். வங்கி உதவிகள் உரிய நேரத்தில் கிடையாது. புது முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகாமல் இருப்பது நன்று. உயர்ச்சிகள் தாமதமடையும். மாணவர்கள் கவலையீனத்தால் முன்னேற்றம் தடைப்படும். பரீட்சை முடிவுகள் திருப்தியாக அமையாது.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

தனுராசியினருக்கு குடும்பத்தில் சமநிலை காணும். குடும்பஸ்தர்களுக்கு அமைதியும், தொழிலும் பாதிப்பில்லாமல் இருக்கும். சகோதரர்களால் உதவி உண்டு. பணவரவு செலவுகளைச் சமாளிக்கக் கூடியதாக அமையும். தேகத்தில் சற்றுச் சோர்வு காணப்பட்டாலும் பெரிய பாதிப்புகள் இல்லை. திருமணம் சம்பந்தமான விடயங்கள் நடைபெறக்கூடிய வாய்ப்புகள் தென்படும். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் நன்கு விற்பனையாகும். பணமும் ஓரளவு சேரும். புதிய வாடிக்கையாளர்கள் சேருவார்கள். உத்தியோத்தர்களுக்கு தொழில் சிறப்பாக நடக்கும். அதிகாரிகள் ஒத்துழைப்பார்கள். மாணவர்கள் கல்வியில் கூடிய அக்கறை செலுத்துவார்கள். விளையாட்டுக்களைக் குறைப்பது நன்று.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திரு வோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

மகர ராசிக்காரருக்கு குடும்ப நிலை சுமுகமாக இருக்கும். சகோதரர்கள், பிள்ளைகள் ஆகியோரின உதவி உண்டு. தொடங்கும் கருமங்கள் மனம்போல் கைகூடும். தேகசுகம் பாதிப்பில்லாமல் இருக்கும். பணவருவாய் திருப்தியாக அமையும். திருமணப் பேச்சுக்கள் அதிசீக்கிரம் நடைபெறக் கூடியதாய் இருக்கும். கொடுக்கல் வாங்கல்கள் சிறப்பாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பணமும் சேரும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளால் வரவேற்பு கிடைக்கும். தொழில முறையில் மாற்றங்கள் கிடைக்கலாம். மாணவர்களுக்கு முன்னேற்றம் நன்றாக இருக்கும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*

கும்பராசிக்காரருக்கு இல்லற வாழ்க்கையில் அமைதி நிலவும். தொழில்துறையில் அனுகூலமான பலனை எதிர் பார்க்கலாம். பண வரவுகள் அன்றாடச் செலவுகளைச் சமாளிக்கக்கூடியதாக அமையும். உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்படலாம். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படலாம். தொடங்கும் கருமங்கள் தங்குதடையின்றி நிறைவுபெறும். காதல் விவகாரங்கள் கைகூடி மகிழ்ச்சியைத் தரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சறப்பாக நடக்கும். நண்பர்களின் உதவ கிட்டும். பவுண் வியாபாரம் நற்பலன் தரும். உத்தியோகத்தர்கள் சிறப்பாகப் பணியாற்றி பலராலும் பாராட்டப்படுவர். மாணவர்கள் கல்வியில் சிறப்பும் முன் னேற்றமும் பெறுவர்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

மீனராசிக்கார ருக்கு பல பிரச்சினைகள் தோன்றி மறையும். இனபந்துக்களின் ஒற்றுமை பாதிக்கப்படும். அயலவர்களுடனான வாக்குவாதங்கள் தோன்றும். புத்திரர்களால் செலவும், கவ லையும் அதிகரிக்கும். வரவிலும் பார்க்க செலவு அதிகமாகும். தேகாரோக்கியம் சிறது பாதிப்படையலாம். கொடுககல் வாங்கல்களில் அவதானம் தேவை. திருமணப் பேச்சுக்கள் குழப்பமடையும். வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த இலாபம் கிடையாது. முன்னேற்றுவதற்கு பணவசதியும் இராது. லாபம் இல்லாவிட்டாலும் நட்டம் ஏற்படாது. உத்தியோகத் தர்களுக்கு பதவி உயர்வு தடைப்படும். வேலைப்பளு அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலை காணும். பணச்செலவும் அதிகம் ஏற்படும்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*கேள்வரகில் நெய் வடிகிறதென்றால்*
*கேட்பவர்க்கு புத்தி எங்கே போயிற்று.*

தமிழ் பழமொழி

# நமது நோக்கு

## கிறிஸ்ரீனா றொக்காவின் அறிவிப்பும் அது குறித்த சில கருத்துப் பதிவுகளும்!

சர்வதேசப் பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயரை அமெரிக்கா நீக்கப் போவதில்லை என்று அந்த நாட்டின் உதவி ராஜாங்கச் செயலர் கிறிஸ்ரீனா றொக்கா அறிவித்துள்ளார். அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான இவரது இக்கருத்து வெளிப்பாடானது தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தை ஓரளவுக்கு ஏற்படுத்தும் விடயமாக இருந்தாலும் அதிர்ச்சியையோ, பீதியையோ ஏற்படுத்தும் விடயமாக இருக்கப்போவதில்லை என்பது மட்டும் தெளிவு.

கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக - அதாவது ஐக்கிய தேசிய முன்னணி ரணில் தலைமையில் சமாதான முயற்சிகளை ஆரம்பித்த காலம் முதல் அந்த ஆட்சியைக் கலைத்து தேர்தல் நடாத்தி புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் ஆட்சிபீடம் ஏறும் வரைக்கும், அதன் பின்னர் இன்று வரைக்கும்கூட - புரிந்துணர்வு மற்றும் போர் நிறுத்த உடன்பாட்டின் சகல அம்சங்களையும், சமாதானத்தின் பேரில் உள்ள விசுவாசத்தின் அடிப்படையிலும், அதற்கு அனுசரணையாக இயங்கி வரும் நோர்வே உட்பட சர்வதேச நாடுகளின் மீதான நம்பிக்கையின் பேரிலும் விடுதலைப் புலிகள் எத்தனையோ அவமதிப்புகளையும், அரசின் போர் நிறுத்த மீறல் சம்பவங்களையும், சகித்துக் கொண்டு, நேர்மையுடனும், நிதானத்துடனும் கடைப்பிடித்து வருவதை நியாயபூர்வமாகச் சிந்திக்கும் உலக நாடுகள் அனைத்தும் வரவேற்று பாராட்டி வருவது தெரிந்த விடயமே.

இன்று உலகம் முழுவதுமே - இலங்கையில் இருப்பது அரசும், சில அறியாமை கொண்ட சில நாடுகளும், கடந்த பல வருடங்களாகப் புலம்பி வந்ததைப் போன்று, பயங்கரவாதப் பிரச்சினையேயல்ல, அது அரசியல் ரீதியில் சமாதானமான வழிமுறைமைக்கையாண்டு பேச்சுவார்த்தைகள் மூலம் நேர்மையாகவும், நியாயமாகவும் அரசால் தீர்த்து வைக்கப்பட வேண்டிய அடிப்படை மனித உரிமைகளுடன் கூடிய அரசியல் பிரச்சினைதான் என்பதை நன்கு உணர்ந்து கொண்ட நிலையிலேயே விடுதலைப் புலிகள் இன்று உலகெங்கும் தாங்கள் யார் என்பதையும், தமிழ்மக்களின் போராட்டம் எத்தகைய நியாயத் தன்மைகளை கொண்டுள்ளதென்பதையும் நிரூபித்து நியாயம் கேட்டுவருவதும் எவரும் அறியாத விடயமல்ல.

இதேவேளை - இன்று உலக நாட்டினர் பலரும் பயங்கரவாதிகள் வாழும் ஆபத்தான பிரதேசம் என்று, இலங்கையரசால் உலகிற்கு அடையாளப்படுத்தி அச்சம் கொள்ள வைத்திருந்த வடக்கு-கிழக்கின் தமிழர் தாயகப் பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்து, பயங்கரவாதிகள் என, அதுவும் உலகின் ஈவிரக்கமற்ற பயங்கரவாதிகள் என இலங்கையரசாலும், அதற்கு போர் வெறியூட்டி, அதன் மூலம் தமது சொந்த அரசியல் மற்றும் இராணுவ அபிலாஷைகளை அடையும் தருணம் பார்த்திருந்த சில மேலாதிக்க - வல்லாதிக்க நாடுகளாலும் பழுப்பிப்பிரசாரம் செய்யப்பட்ட விடுதலைப் புலிகளுடன் கைகுலுக்கி பேசி பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடி விடுதலைப் புலிகளின் போராட்ட நியாயத்தன்மையை தெளிவாக உணர்ந்து திரும்புகிறார்கள்.

வேறுசில மனித உரிமைகளை மதிக்கும் நாடுகள் அவர்களை தங்கள் நாடுகளுக்கு வரவழைத்து வரவேற்று தங்கள் நாடுகளில், இங்குள்ளது போன்ற இனப்பிரச்சினைகள் எவ்வாறு அமைதியான முறையில் தீரக்கப்பட்டன என்பது குறித்து கலந்துரையாடி ஆலோசனைகள் வழங்கி கௌரவித்து அனுப்புகிறார்கள்.

-வரலாறு தனது தவறுகளை உணர்ந்து திருத்திக் கொள்ளத் தொடங்கியுள்ளது.

- இலங்கையின் இன்றைய அரசும் அதன் ஜனாதிபதியும் இந்த வரலாற்றுத் திருப்பத்தை ஏற்கமுடியாதவர்களாக இன்னமும் தங்களின் பழையதும் காட்டுமிராண்டித்தனமானதுமான பேரினவாத வெறியுடன் கூடிய செயற்பாடுகளின் மீதான பிடிப்புக்களில் இருந்து விடுபடமுடியாத நாச சக்திகளாக இருப்பதுதான் இலங்கையில் சமாதானமும், அமைதியும் ஏற்பட ஒரேயொரு தடையாகவுள்ளது என்பதையும் நியாயபூர்வமான முறையில் சிந்திக்கும் உலக சமூகம் உணர்ந்தேயுள்ளது.

-ஆனால் இலங்கைப் பிரச்சினையில் எப்போதுமே தவறான கற்பிதங்களை சிந்தையில் கொண்டவர்களாக தமது வல்லாதிக்க நலன்களின் அடிப்படையிலேயே தமது சொந்த நாடுகளின் அரசியல் நலன்களுக்கமைய கொள்கைகளை வகுத்து செயற்படும் ஓரிரு நாடுகள் வேண்டுமென்றே விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என இன்னமும் கூறிக்கொண்டிருப்பது அர்த்தமற்ற அலறலேயாகும்.

-குறிப்பாக இந்தியா, அமெரிக்கா போன்ற இலங்கையை மையப்படுத்தி இந்து சமுத்திர பிராந்தியத்தில் தமது ஆதிக்க வலுவை அதிகரிக்கும் போட்டிக்கு தமிழ்மக்களின் பிரச்சினையையும் விடுதலைப்புலிகளைய்ம் பயன்படுத்தும் தந்திரங்களை உபயோகிப்பதுதான் வேதனை தரும் விடயம்.

-இந்த இரு நாடுகளும் வேண்டுமென்றே விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாக்குவதன் மூலம் ஒட்டுமொத்தத் தமிழர்களையும் (இனமான உணர்வு கொண்ட தமிழர்களையும்) பயங்கரவாதிகளாகப் பிரகடனம் செய்ய முயல்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

தமிழர்கள் வேறு விடுதலைப்புலிகள் வேறு அல்ல என்பதை கடந்த பொதுத் தேர்தல் நிரூபித்துள்ள நிலையில் அமெரிக்கா விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் பட்டியலிலிருந்து நீக்காது, என்ற கிறிஸ்ரீனா றொக்காவின் கருத்து முழுத்தமிழர்களையும் பயங்கரவாதிகள் எனப் பட்டியலிடும் அர்த்தமற்ற கருத்தாகவே உள்ளது.

-புலிகள் இன்னமும் சிறார்களை போராளிகளாக இணைக்கிறார்களாம் றொக்கா தான் கூறுகிறார். ஏதாவது காரணம் கூற வேண்டுமென்பதற்காக ஒரு போலி நியாயம் கற்பிக்க முனைந்துள்ளார்.

-அமெரிக்கா இதை இப்படித்தான் சொல்லும் என்பது தமிழ்மக்களுக்கு தெரியாததல்ல...

-சொல்லுவார் சொன்னால் கேட்பாருக்கு மதியென்ன?

# நாடும் நடப்பும்




செய்தி:- மீண்டும் சமாதானத்துக்கான யுத்தமுனைப்புடன் ஜனாதிபதி காய்களை நகர்த்துகிறாரா என்ற கேள்வி சகல மட்டத்திலும் எழுப்பப்படுவதாகவுள்ளது.

# பல்கலை. ஊழியர் சங்கப் போராட்டம் நேற்றுமுதல் தற்காலிக இடைநிறுத்தம்

கடந்தவாரம் முதல் யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம், நேற்று நண்பகலுடன் தற்காலிகமாக கைவிடப் பட்டிருப்பதாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று அறிவித்தது.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

நேற்று வியாழக்கிழமை காலை கூடிய ஊழியர் சங்கப் பொதுச்சபை 23ஆம் திகதி அன்று துணைவேந்தருடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் குறித்து நுணுக்கமாக ஆராய்ந்தது.

இது குறித்து அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் வெளியிட்ட கருத்தும் பொதுக் கூட்டத்தில் விளக்கப்பட்து.

இந்தப் பெறுபேறுகளின் அமுலாக்கல் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும் பேரவைக் கூட்டத்தின் முடிவுகளிலேயே தங்கியுள்ளதென்பதால், வேலைநிறுத்தத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர முடியாதெனவும், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் பிறபொது அமைப்புகளின் வேண்டுகோளுக்கு கௌரவமளித்து எமது ஒத்துழைப்பை வழங்கும் முகமாக நேற்று காலை 11.30 மணியிலிருந்து வேலைநிறுத்தத்தை தற்காலிகமாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடை நிறுத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

28ஆம் திகதி திங்கள் காலை 9.00 மணிக்கு சகல அங்கத்தவர்களையும் இராமநாதன் மண்டபமுன்றலில் ஒன்று கூடுமாறும், அங்கு பேரவையின் முடிவுகள் பரிசீலிக்கப்படுமெனவும் சங்க உறுப்பினர்களை சங்கத்தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

26 ஆம் திகதி சனிக்கிழமை கூடவுள்ள பல்கலைக்கழகப் பேரவையில் ஊழியர் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு வித்திட்ட சகல காரணிகள் குறித்தும் அது தொடர்பாக மேற்கொண்ட முடிவுகள் குறித்து சனிக்கிழமை பிற்பகல் அல்லது ஞாயிறு காலை பல்கலைக்கழக நிர்வாகத்தால் ஆசிரியர் சங்கம், மாணவர் ஒன்றியம், ஊழியர் சங்கம், சர்வதேச மாணவர் பேரவை முதலானோரிடம் கையளிக்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனத்துக்கு 28ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்பாக, ஊழியர் சங்க நிலைப்பாடு அறிவிக்கப்பட வேண்டிய நிலை உள்ளதால் நிர்வாகம் விரைந்து செயற்படுமென எதிர்பார்க்கின்றோம் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

# இலங்கைக்கு வரமுயன்ற 3 பேர் தமிழகத்தில் கைது

ராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு அகதிகளை ஏற்றிச் சென்ற படகில் இருந்து இறக்கிவிடப்பட்ட 3 பேரை தமிழகப் பொலிஸார் கைதுசெய்தனர்.

ராமேஸ்வரத்தில் இருந்து சட்டத்திற்கு புறம்பாக படகில் அகதிகள் இலங்கை வருவது தொடர்கிறது. சில நாட்களுக்கு முன்பு சட்டவிரோதமாக இலங்கை வர முயன்ற 27 அகதிகளை இந்திய கடற்படையினர் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலையில் கடற்கரையில் மறைந்திருந்த 3 இலங்கை அகதிகளை ராமேஸ்வரம் பொலிஸார் பிடித்தனர்.

கும்மிடிப்பூண்டி, கரூர், திருச்சி, மதுரை முகாம்களை சேர்ந்த அகதிகள் 30 பேர் இலங்கை செல்வதற்காக தனியார் பஸ் மூலம் நேற்று முன்தினம் ராமேஸ்வரம் சென்றனர்.

ராமேஸ்வரத்தில் இவர்களை பஸ்ஸிலே வடகாடு கடற்கரைக்கு அழைத்துச்சென்ற உள்ளூர் முகவர்கள் நள்ளிரவில் இலங்கையில் இருந்துவந்த கடத்தல் படகில் அனுப்பி வைத்தனர். படகில் அதிகளவு அகதிகள் ஏற்றப்பட்டதனால் படகு கவிழ்ந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் படகிலிருந்து இறக்கி விடப்பட்ட மூன்று அகதிகள் ஓலைக்குடா கடற்கரை வழியாக ராமேஸ்வரத்திற்கு நடந்து சென்றனர். அதிகாலையில் ஓலைக்குடா கடற்கரைப் பகுதியில் 3 அகதிகள் நடந்து செல்வதை பார்த்த மீனவர்கள் உடனடியாக ராமேஸ்வரம் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து கடற்கரைக்குச் சென்ற பொலிஸார் அங்கு மறைந்திருந்த 3 அகதிகளையும் பிடித்து அவர்களிடம் இருந்த பொருட்களையும் கைப்பற்றினர். பொலிஸார் விசாரணையில், பிடிபட்ட மூவரும் வவுனியாவை சேர்ந்த தங்கேஸ்வரன் (32), பெருமாள் என்ற லோகு (31), அந்தோனி முத்து (38) ஆகியோரே என்றும் இவர்கள் தமிழகத்தில் குடும்பத்துடன் அகதிகளாக தங்கி இருந்ததும் தெரியவந்தது.

# யாழ். சிறைச்சாலையில் அம்மை நோய் தீவிரம்

மீண்டும் யாழ். சிறைச்சாலையில் திடீரென பரவிவரும் அம்மை நோயினால் 32 கைதிகள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளதாக யாழ்.சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இடநெருக்கடிகள் மற்றும் ஆளணிப்பற்றாக் குறைகளுடன் இயங்கிவரும் யாழ். சிறைச்சாலையில், தற்போது 207 சிறைக்கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் பாவனைக்கு மூன்று மலசல கூடங்களேயுள்ளன.

இதனால், கைதிகள் காலை வேளைகளில் மலசல கூடப் பாவனைக்கு வசதியின்றிப் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். இதனைவிட, இடநெருக்கடியும் இத்தகைய தொற்றுநோய்கள் வேகமாகப் பரவுவதற்கு ஓர் காரணமாக விளங்குகின்றது. அம்மை நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு யாழ். சிறைச்சாலையின் தனியான இடமொன்று ஒதுக்கப்பட்டு, தங்கவைக்கப்பட்டுள்ள போதிலும், நாளுக்குநாள் அவர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வருகின்றமையானது சிறைச்சாலை நிர்வாகத்திற்குப் பெரும் சிரமம் ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதைவிட சிறை மேற்பார்வையாளர்கள், பராமரிப்பாளர்கள், சிறைக்காவலர்கள் போன்றோரின் பற்றாக்குறைகளும் சிறைச்சாலைகளின் பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள முடியாத நிலையைத் தோற்றுவித்திருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ப)

# விடுவிக்கப்பட்ட 3 இந்திய மீனவர்கள் மீன்பிடிப் படகைத் தருமாறு கோரிக்கை

யாழ். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட மூன்று இந்திய மீனவர்கள் தமது மீன்பிடிப் படகுகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு, யாழ் மாவட்ட மேல் நீதி மன்றத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த மாதம் விடுதலை செய்யப்பட்ட 19 இந்திய மீனவர்களில் இவர்கள் மூவரும் விடுதலைசெய்யப்பட்டிருந்த போதிலும், தம்மை இலங்கைக் கடற்படை கைது செய்யவில்லை இன்பருட்டி மீனவர்களே பிடித்தனர். எனவே, எமது மீன்பிடிப் படகுகளை மீண்டும் எம்மிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்து அவர்கள் மேல் நீதிமன்றில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த மூன்று மீனவர்களும் யாழ்.சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களது இந்த வேண்டுகோள் குறித்து விசாரணைகள் அடுத்த மாத முற்பகுதியில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, யாழ். சிறைச்சாலையில் விசாரணைகள் முடிவுறாத நிலையில், மேலும் இரண்டு இந்திய மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## காலத்திற்குரிய குறிப்புகள்

**வல்லையூரான்**



*சிங்கள தேசத்தைப் பற்றி சிங்கள மக்களைப்பற்றி - இனவாதத்திற்குத் தூபமிடும் சிங்கள ஊடகங்கள் பற்றியெல்லாம் அறிந்துகொள்ள, புரிந்துகொள்ள, தெரிந்துகொள்ள முடிகின்றது. நான் அறிந்தவற்றை - தெரிந்தவற்றை - புரிந்துகொண்டவற்றை நீங்களும் அறிந்து, தெரிந்து, புரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காகவே 'காலத்துக்குரிய குறிப்புகள்' என்னும் இந்தத் தொடரினை ஆரம்பிக்கின்றேன்.*

*'வல்லையூரான்'*

# செங்கோலைக்கடத்திச் செல்லுமளவிற்கு கொடுங்கோன்மையாகிவிட்ட ஜனநாயகம்...

தற்போதைய அரசிற்கு நாடாளுமன்றத்தினுள் பெரும்பான்மை இல்லை. அது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. ஆனபடியால் நாடாளுமன்ற நடவடிக்கைகளை முறைமை சார்ந்து நடத்திச்செல்வதற்கு அரசிற்கு இயலுமாக இல்லை. இதன்காரணமாக நாடாளுமன்றம் மாதத்துக்கு ஒரு தடவை கூடினாலும் அரசிற்கு வரிகள் வசூலிப்பதற்கோ, புதிய வருமானங்களைக்கொண்டு வருவதற்கோ வழிமுறைகள் இல்லை. அரசுமேற்கொள்ளும் கொள்கைகளும், தீர்மானங்களும் நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படவேணடும் என்பதனால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமல் தற்போதைய அரசு எவ்வளவு காலத்துக்கு இந்தப்பயணத்தினை மேற்கொள்ளமுடியும் என்று சொல்லமுடியாது. இந்தவிதமாக நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து ஒத்திவைத்துச் சென்ற ஒரு சந்தர்ப்பத்தில் அரசினைத் தொடர்ந்து கொண்டுசெலவதற்கு இயலாதவேளையும் உதயமாகும்.

**இந்தவாரம்,** நாடாளுமன்றத்தின் முன்னாள் செயலாளர் சாம்விஜேசிங்க மிக உயர்ந்த நாடாளுமன்றத்தினைப் பற்றியும், கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற அநாகரீகமான அசிங்கமான செயல்கள் பற்றியும், பெரும்பான்மைப் பலம் இல்லாத நிலையில் தற்போதய அரசு என்ன செய்யவேண்டும் என்பது பற்றியும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கட்டுப்பாடுகள் பற்றியும் விரிவாக விளக்கியுள்ளதை உங்களுக்காகத் தருகின்றோம்.

தற்போதைய அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இல்லாத அரசாங்கமாகும். இதுபோன்ற அரசு எந்த நொடிப்பொழுதிலும் நாடாளுமன்றத்தினுள் தோல்வியடைந்து உடைந்து விழுகின்ற பாதுகாப்பற்ற நிலை இருக்கின்றது. அரசுக்கு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வதற்கு ஜனாதிபதி கடந்த மூன்று மாதத்துக்குக் கிட்டிய காலத்தினுள் பலவிதமான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார். ஆனால், இன்றுவரை அந்த அனைத்து முயற்சிகளும் பலனற்றுப்போயுள்ளன. அவரால் இதுவரை கட்டியெழுப்பப்பட்ட பாலங்கள் அனைத்தும் உடைந்துபோயிற்று.

புத்தசுவாமிகள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போன்று முஸ்லீம் சமூகத்தின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொள்வதற்கு அரசு பாவித்த உபாயங்களும் பலன் தரவில்லை. என்னால் தெரிந்துகொள்ளக் கூடிய உத்தியோகபபற்றற்ற தகவல்களின்படி, அரசு இப்பொழுது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை வளைத்துப்போடுவதற்கு ஆரம்பித்துள்ளது. இதில் ஒருவருக்கு 60 லட்சம் ரூபாவைத் தாண்டும் என தெரிந்துகொள்ளமுடியகின்றது. இவை அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, ஜனாதிபதி பாரதூரமான சிறைக்குள இருக்கின்றார் என்பது தெரியவருகின்றது.

பெரும்பான்மைப் பலத்தோடு இந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசினை எவ்வித அடிப்படையுமின்றிக் கலைத்துவிட்டு, அரச அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்தமையாலேயே ஜனாதிபதி இந்தச் சிக்கலுக்கு முகம் கொடுக்கின்றார் எனபதையும் இங்கே நினைவு கூறவேண்டும்.

அரசுக்கு நாடாளுமன்றத்தினுள் பெரும்பான்மை இல்லாதபடியால் நாடாளுமன்றத்தில் செய்வதற்கு எதுவுமே இல்லை என்ற இடத்துக்கு அரசு உட்பட்டிருக்கின்றது. குறைந்தது மாதத்துக்கு எட்டு நாட்களாவது கூடவேண்டிய நாடாளுமன்றம், இப்பொழுது மாதத்துக்கு ஒரு தடவை மாத்திரமே கூடுகின்றது. அந்தக் கூட்டமும் அல்லோலகல்லோலத்தில் முடிவடைந்து மேலும், ஒரு மாதத்திற்கோ இரண்டு மாதங்களுக்கோ ஒத்திவைக்கப்பட்டு கலைகின்றது. அரசு அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட காலப்பகுதியினுள் நீதியை, சட்டத்தைப் போட்டு, கொள்கைப் பிரகடனத்தையாவது சமர்ப்பித்துக்கொள்வதற்கு அரசிற்கு முடியவில்லை.

இவை அனைத்துக்கும் இடையில் நாடாளுமன்றத்தின் ஒழுக்காற்று சம்பிரதாயங்கள், ஒழுக்கம் என்பன உடைந்து விழுந்துள்ளன. இதைப்பற்றிக் குற்றஞ்சாட்டுகின்றபொழுது இப்பொழுது நாடாளுமன்றத்தினுள் இருக்கும் பொதுமக்களின் பிரதிநிதிகள்மீது மாத்திரம் குற்றம் சொல்லிப்பிரயோசனம் இல்லை.

இன்றைய நாடாளுமன்றத்தினுள் பிரதிபலிப்பது இன்று நாட்டிலுள்ள சமூகத்தின் நலிவின் பிரதிபலனேயாகும். அர்க்கத்தனமானவர்களை திவ்விய வீட்டைச் சேர்ந்தவர்கள் என்று சொல்வதைப்போல, பொதுமக்கள் தெரிந்தெடுத்தவர்களது. தன்மை இப்படித்தான் இருக்கின்றது. அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வெறுமனே வரவில்லை. பொதுமக்களது வாக்குகளைப பெற்றுவந்தார்கள். ஆகையால், நாடாளுமன்றத்தினுள் நிகழும் தகுதியற்ற செயற்பாடுகளுக்கு முதலில் சமூகம் பொறுப்பேற்க வேண்டும். அதன்பிறகு இந்த சண்டியர்கள், பாதகர்கள், நல்ல பண்பற்றவர்களை இந்த இடத்துக்கு வருவதற்கு வரம் அருளிய கட்சித் தலைவர்களும் இதற்குப் பொறுப்புச்சொல்ல வேண்டும். பொதுமக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு தகுதியானவர்களை அனுப்புவது பற்றி கட்சித்தலைவர்களுக்கு பாரிய பொறுப்பு உண்டு.

நாடாளுமன்றத்தின் மூலம் நாட்டிற்குச் செய்யவேண்டிய கட்டாய கடப்பாடுகள் பெருந்தொகையாகும் இதில் முதலாவது, வரவு- செலவு அறிககை நிறைவேற்றம், அரசியலமைப்பு விதிகளை மாற்றுவதென்றாலும், அதனபொருட்டும் நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டும். இதற்கு மேலதிகமாக புதிய சட்டங்கள் ஏற்படுததப்பட வேண்டும் என்று எந்தவித தேவையும் இல்லை. தற்பொழுது இந்தநாட்டில் நீதிச்சட்டங்கள் 800 அளவில் உண்டு. ஆனால், அவற்றுள் எத்தனைக்கு எத்தனை சரியான விதமாகச் செயற்படுகின்றது? ஆனபடியால் புதிய சட்டங்களை அமுலாக்குவதற்கு முன்பு இருக்கின்ற சட்டங்களை நடைமுறைப்படுத்திக்கொள்வதற்கு அரசிற்குப் பொறுப்பு உண்டு.

கடந்ததடவை நாடாளுமன்றம் கூடிய பொழுது நாடாளுமன்றத்தினுள் நிகழ்ந்த நிகழ்வுகள் மிகவும் தகுதியற்றவைகள் காவியுடை அணிந்த பிக்குகளுக்கு, பொறுப்போடு கூடியவர்கள் செய்த தொல்லைகளினால சமூகத்தில் உண்டான அருவருப்பு விசாலமானதாகும். ஜாதிக ஹெல உறுமயவின் புதிய நாடாளுமன்ற உறுப்பினருக்குரிய பதவியேற்பினை வழங்குவது செல்லுபடியானதல்ல என அரசு கூறுகின்றது. அந்தப் புத்தபிக்கு பதவிப் பிரமாணம் செய்யக்கூடாதென நீதிமன்றம் ஆணையிட்டிருந்ததாகவும், அரசு கூறியிருந்தது.

ஆனால் புத்ததேரரும், சபாநாயகரும் தங்களுக்கு அது பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லையெனக் கருத்து வெளியிட்டுள்ளனர். கடந்த நாடாளுமன்ற சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக எந்தவித ஆணையும் வழங்குவதற்கு எந்தநீதிமன்றத்திற்கும் அதிகாரம் இல்லை.

அதைப்பற்றி இதற்கு முன்பு சபாநாயகராக இருந்த அநுராபண்டாரநாயக்கவும் கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார். அது மாத்திரமல்ல இதற்கு பல வருடங்களுக்கு முன்பு எச்.என்.ஜீ. பெர்னாண்டோ பிரதம நீதியரசராகப் பதவிவகித்த சமயம் நாடாளுமன்றத்தின் உள்ளக நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையிடுவதற்கு அதிகாரம் இல்லாதமையால் நாடாளுமன்ற நீதிச்சட்டங்கள் மற்றும் விதிகளுக்கமைய அந்தப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதுபோன்ற கடந்தகால முன்னுதாரணங்கள் இருக்கும்பொழுது அக்மீமன தேரருக்குப் பதவிப்பிரமாணம் வழங்க முடியாததென நீதிமன்ற ஆணையுள்ளதென்று கூறி, தேரருக்கு நாடாளுமன்றத்தினுள் தொல்லைகள் செய்வதற்கு அரசின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு அதிகாரம் இல்லை. அடுத்தது இந்த இடையூறுகள் காயங்கள் ஏற்பட்டது. அக்மீமன தயாரத்ன் தேரருக்கு மாத்திரமல்ல, ஜாதிக ஹெல உறுமயவைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மற்றைய புத்தபிக்குவுக்கும், தயாரத்ன தேரருக்கு முறைமைசார் நீதிமன்றக் கட்டளை வழங்கப்பட்டிருந்தால், அந்தநீதிமன்றக் கட்டளையை அவர் மீறிவிட்டார் என்பதனை நீதிமன்றத்தில் நிரூபிக்கவேண்டும். அப்பொழுது நீதிமன்றத்தினால் அவருக்குத் தண்டனை வழங்குவதையோ அல்லது வேறு செயற்பாடுகளையோ எடுக்கமுடியும். அதற்கு இடம் வழங்காமல் நாடாளுமன்றத்தினுள் புத்தபிக்குவைத் தாக்கியோ அல்லது தொல்லைகள்செய்தோ பதவிப்பிரமாணம் வழங்குவதனை இரத்துச்செய்வதற்கு எந்த ஒருவருக்கும் அவசியம் இல்லை.

அன்று நாடாளுமன்றத்தினுள் நிகழ்ந்த நிகழ்வுகளைப் பார்க்கும்பொழுது இந்த நடவடிக்கை அரசிலுள்ள சிலரால் முன்கூட்டியே திட்டமிட்டு நிகழ்ந்தப்பட்டுள்ளதாகச் சந்தேகம் கொள்ளமுடியும். அப்படியில்லாது அதுபோன்ற ஆர்ப்பாட்டம் திடீரென்று ஏற்பட்டிருக்க முடியாது.

அக்மீமன தயாரத்ன தேரருக்கு சத்தியப் பிரமாணம் செய்விப்பதைத் தவிர்த்துக்கொள்



வதன்பொருட்டு செங்கோலைக்கூடத் தூக்கிக் கொண்டுசென்றது அரசின் அமைச்சர்கள் தான் என்பதனை இப்பொழுது முழுநாடுமே அறியும்.

அவை எப்படி நிகழ்ந்தது. திட்டத்தோடு கூடியது என சிலர் கூறுகின்றனர். சபாநாயகர் தலைமை ஆசனத்தில் இருக்கும்பொழுது யாரோ ஒருவர் பலாத்காரமாக செங்கோலைத் தூக்கிச்சென்றார் என்பதற்காக நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் எவ்விதத்திலேனும் செல்லுபடியாகாமற்போகாது.

செங்கோல் என்பது நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ சின்னம் மாத்திரமே. பிரித்தானிய நாடாளுமன்ற முறைகள் பற்றி எங்களுக்கு முன்மாதிரி வழங்கியநாடு. 1649 ஆம் ஆண்டு தொடக்கம் 1660 ஆம் ஆண்டுவரை அந்தநாட்டை நிர்வகித்த 'க்ரோம்வெல்' நாடாளுமன்றம் செங்கோல தேவையற்றதென்று கூறி, அதனைக் குப்பைமேட்டில் வீசி எறிந்தார். ஆனால், பிரித்தானியச் சட்டம் பிரச்சினைகளுக்கு அது தடையாக இருக்கவில்லை. அதற்கு அண்மித்த காலத்தில் 'பெகட்' என்ற நாடாளுமன்ற உறுப்பினர் பிரித்தானிய நாடாளுமன்றம் நடைபெற்றபொழுது, செங்கோலைக் கடத்திக் கொண்டுசென்றார். ஆனால், சபையின் நடவடிக்கைகள் அதனால் இரத்தாகாதென்று சபாநாயகர் கூறினார். ஆதலால், அன்றைய நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் இரத்தாவதற்கு எந்தவித அரசியல் அமைப்பு விதிகளோ மற்றும் சம்பிரதாயங்களோ இருப்பதாக எனக்கென்றால் தெரியவில்லை.

தற்போதைய அரசிற்கு நாடாளுமன்றத்தினுள் பெரும்பான்மை இல்லை. அது மிகவும் தெளிவான காரணம். ஆனபடியால் நாடாளுமன்ற நடவடிக்கைகளை முறைமைசார்ந்து நடத்திச்செல்வதற்கு அரசிற்கு இயலுமாக இல்லை. இதன்காரணமாக நாடாளுமன்றம் மாதத்துக்கு ஒரு தடவை கூடினாலும் அரசிற்கு வரிகள் வசூலிப்பதற்கோ புதிய வருமானங்களைக்கொண்டு வருவதற்கோ வழிமுறைகள் இல்லை. அரசுமேற்கொள்ளும் கொள்கைக்கோட்பாடுகளும், தீர்மானங்களும் நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட வேணடும் என்பதனால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமல் தற்போதைய அரசு எவ்வளவு காலத்துக்கு இந்தப் பயணத்தை மேற்கொள்ளமுடியும் என்று சொல்லமுடியாது. இந்தவிதமாக நாடாளுமன்றத்தைத் தள்ளிவைத்து தள்ளிவைத்துச் சென்ற ஒரு சந்தர்ப்பத்தில் அரசினைத் தொடர்ந்து கொண்டுசெல்வதற்கு இயலாதவேளையும் உதயமாகும்.

அரசிற்குப் பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களது அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு இயலவில்லை என்றால், எதிர்க்கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 113 க்கு அதிகமாக இருந்தால் ஜனாதிபதி நாட்டின் நீதிக்கும், அரசியல் சம்பிரதாயத்துக்கும் அமையசெயற்படவேண்டும். அப்பொழுது முதலில் செய்யவேண்டியது - அரசு பதவி விலக வேண்டும்.

ஆனால் ஒரு வருடம் கழியும்வரை பொதுத் தேர்தலை வைப்பதற்கு ஜனாதிபதிக்கு சட்டத்தின்படி இடமில்லை. ஆனபடியால் அவரது சிந்தனைக்குரிய நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கக் கூடிய ஒருவர் இருந்தால் அரசை அமைக்கும் வண்ணம் அவரிடம் அழைப்பு விடுக்கவேண்டும். அப்படியில்லாமல் இனிமேலும் நடத்திச் செல்வதற்கு முயற்சி செய்தால் அரசுபெற்றோல் இல்லாத வாகனத்துக்குச் சமமாகும். வாகனம் எவ்வளவுதான் நல்லாக இருந்தாலும் அதில் பயணம் செய்ய முடியாது.

பொதுவாக நாடாளுமன்றத்துக்கு தலைமை தாங்குவது பிரதமராகும். நான் அறிந்தவரையில் தற்பொழுது இருக்கக்கூடிய விதமாக பிரதமருக்கு இந்த நிலவரங்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு இடம் வழங்கப்படவில்லை என்பது பிரசித்தமானதாகும். ஆனால், பிரதமர் தனக்கு இருக்கின்ற அதிகாரத்தினைப் பாவிக்கும்பொழுது, நாடாளுமன்றத்தில் அநாகரிகச் செயற்பாடு கடுமையாகக் கட்டுப்படுத்தப்படும். அதற்கிடையில் நாடாளுமன்றத்தில் அனைத்து நடவடிக்கைகளையும் நிர்வகிப்பதற்கான அதிகாரத்தினை பிரதமருக்கு வழங்குவது ஜனாதிபதியினுடைய பொறுப்பாகின்றது. அப்படிச் செய்யாதுவிடின் அமைச்சர்கள், பிரதியமைச்சர்களது பிழையான செயற்பாடுகள் காரணமாக வெறுப்புக்குள்ளாவது அரசாங்கம்தான். அன்று நாடாளுமன்றத்தில் புத்தபிக்குகளுக்குச் செய்யப்பட்ட இடையூறுகள் பற்றி எதிர்க்கட்சியும், பொதுமக்களைப்போன்றே அரசாங்கத்தின் ஆதரவாளர்களும் கவலைக்குள்ளாகியுள்ளனர்.

எப்படியாயினும் தமக்கு இல்லாத பெரும்பான்மையைக்கொண்டு அரசினை நடாத்திச் செல்வதற்கு முயற்சிசெய்யாமல், இந்தவிதமாக நாடாளுமன்றத்தின் கௌரவத்தினை மாசுபடுத்தி அந்த மிக உயர்ந்த நிறுவகத்தை பொறுப்பற்றதாக்குவதை எவராயினும் விலக்கிக்கொள்ளவேண்டும். அரசு, எதிர்க்கட்சியினரைப்போன்றே நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் அனைவரினதும் பொறுப்பு அதுவாகும்.

### ஈராக்கின் நான்கு நகரங்களில்

# நடத்தப்பட்ட தாக்குதல்களில் 89 பேர் பலி, 318 பேர் காயம்



ஈராக்கின் முக்கிய நான்கு நகரங்களில் இடம்பெற்ற வன்செயல்களில் 89 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும், 318 பேர் வரை காயமடைந்துமுள்ளனர். இந்த நான்கு நகரங்களிலும் நடந்த தாக்குதல்கள் தொடர்ச்சியாகத் திட்டமிட்டு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பகுபா மற்றும் றமாடி ஆகிய இரு நகரங்களிலுமுள்ள பொலிஸ் நிலையங்கள், அமெரிக்கத் துருப்பினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 19 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

மற்றொரு நகரான மொசூலில் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் இந்த நகரப் பகுதியிலிருந்து பதற்றம் காரணமாக பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்த வண்ணமுள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்பில் 3 அமெரிக்கப் படையினர் உயிரிழந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

பகுபா நகரின் பிரதான வீதியை கறுப்புத் துணியால் முகத்தை முடிய ஆயுததாரிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்ததாக சம்பவத்தை நேரில் கண்ட அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இங்குள்ள பொலிஸ் நிலையத்தை இந்த ஆயுததாரிகள் கனரக ஆயுதங்கள் மற்றும் றொக்கட் லோஞ்சர்கள் மூலம் தாக்குதலை நடத்தியதாகவும், ஆனால் இவர்கள் யாரென்பது தமக்குத் தெரியாதெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

பகுபா நகரில் அமெரிக்கப் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை, அல் முபாரக் என்னும் அமைப்பு தாக்குதலை நடத்தியதாகவும் படையினர் திருப்பித் தாக்கியவேளை இரு கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் அமெரிக்க இராணுவ அதிகாரியான மேஜர் நீல் ஓ பிறைன் தெரிவித்தார்.

## உலக நோக்கு

அத்துடன், மக்கள் பெருமளவில் கூடியிருந்த பகுதிகளில் கிளர்ச்சியாளர்கள் மோட்டார்கள் மூலம் கண்மூடித்தனமாக தாக்குதலை நடத்தியதாகவும் இதில் இரண்டு அமெரிக்கப் படையினர் உயிரிழந்து, ஏழுபேர் காயமடைந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிளர்ச்சியாளர்களின் ஒரு நிலை மீது 225 கிலோகிராம் நிறையுடைய மூன்று குண்டுகளை அமெரிக்க விமானப்படை வீசியதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

றமாடி பகுதியில் அமைந்துள்ள இரண்டு பொலிஸ் நிலையங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஏழு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 13 பொதுமக்கள் காயமடைந்தனர்.

மொசூல் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் ஒரு அமெரிக்கப் படைவீரர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

இந்தப் பிரதேசத்தில் அமெரிக்க ஹெலிகொப்ரரான கோப்ரா தாக்குதல் நடத்தியதகவும், சேதவிபரங்கள் எதுவும் தெரியவரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### அணுவாயு அகற்றல் குறித்து

# புதிய திட்டத்தினை வடகொரியா ஏற்கவேண்டுமென்கிறது அமெரிக்கா

தடைப்பட்ட சர்வதேச உதவிகள் வடகொரியாவிற்கு கிடைக்கவேண்டுமெனில் அந்த நாட்டிலுள்ள அணுவாயுதங்களை அகற்றுவது தொடர்பான புதிய திட்டத்தை வடகொரியா ஏற்கவேண்டுமென அமெரிக்கா வற்புறுத்தியுள்ளது.

பெய்ஜிங்கில் இரண்டு கொரியாக்களும் அணுவாயுதங்கள் ஒழிப்புத் தொடர்பாக ஆறு நாடுகள் தற்போது நடத்திவரும் பேச்சுவார்த்தையிலேயே இந்த புதிய திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

வடகொரியா புதிய திட்டத்தின்படி - தன்னிடமுள்ள ஆணுவாயுதங்களை அகற்றுவதற்கு உடன்பட்டால், உணவு மற்றும் ஓயில் என்பன அந்த நாட்டுக்கு அனுப்பப்படுமென வொஷிங்ரன் தெரிவித்தது.

ஆனாலும், இதுவரை இந்தப் புதிய திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக வடகொரியா அறிவிக்கவில்லை.

இருந்தபோதிலும், முன்னைய திட்டத்தைவிட தற்போது முன்வைக்கப்பட்டுள்ள திட்டம் நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்ததெனத் தெரிவிக்கப்படுகிறது. முன்னர் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முதல் வடகொரியா தன்னிடமுள்ள ஆயுதங்களை அழிக்க வேண்டுமென அமெரிக்கா தெரிவித்திருந்தது.

இதேவேளை, இப்பேச்சுவார்த்தை குறித்து கருத்து தெரிவித்த வொஷிங்ரன் பேச்சாளரான ஸ்கொட் மக்லீன் - தற்போது நடைபெறும் அணுவாயுத ஒழிப்புத் தொடர்பாக நடைபெறும் பேச்சுவார்த்தையானது பின்வாங்க முடியாததும், பரிபூரணமானதுமாகும். ஆனாலும், பாதுகாப்பு தொடர்பில் நாம் சில உத்தரவாதங்களையும் வழங்கவேண்டியுள்ளது.

இவ்வாறான ஒரு பேச்சுவார்த்தையின் மூலமே லிபியாவும் இந்தத் திட்டத்தை கைவிட்டது. அதுபோலவே தற்போதைய பேச்சுவார்த்தை மூலம் வடகொரியாவையும் படிப்படியாக இந்த திட்டத்தைக் கைவிடச் செய்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# சவுதியிலுள்ள வெளிநாட்டு ஆயுததாரிகளை ஒரு மாதத்தில் சரணடைய காலக்கெடு விதிப்பு

சவுதியில் ஒளிந்துள்ள வெளிநாட்டு ஆயுததாரிகளை ஒரு மாதத்திற்குள் சரணடையுமாறும், அவ்வாறு சரணடைந்தால் பொது மன்னிப்பு வழங்கப்படுமெனவும் சவுதி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இளவரசர் பாத் சார்பாக அரச தொலைக்காட்சியில் தோன்றிய இளவரசர் அப்துல்லா வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மதத்தின் பெயரால் யாராவது வன்முறைகளில் ஈடுபடுவார்களாக இருந்தால் அவர்கள் உடனடியாகவே அவற்றைக் கைவிடவேண்டும். இல்லையெனில் அவர்கள் கடவுளின் சட்டத்தினால் தண்டிக்கப்படுவர்.

சவுதி அரசாங்கம் ஆயுததாரிகளை சரணடையுமாறு அழைப்பு விடுத்தமையானது சவுதிக்கான அல்கொய்டா தலைவர் அபுல் அசிஷ் அல் மொக்றின் கடந்த வெள்ளிக்கிழமை கொல்லப்பட்டதனாலாகும்.

அண்மைக் காலமாக சவுதியில் இஸ்லாமிய போராளிகளின் தாக்குதல் அதிகரித்தமையும், இறுதியாக அமெரிக்க பொறியியலாளர் கழுத்து வெட்டி கொலை செய்யப்பட்டமையும் சவுதி அரசாங்கம் இவ்வாறான அறிக்கையை வெளியிட மேலுமொரு காரணம் என கூறப்படுகின்றது.

இதேவேளை, வெளிநாட்டு ஆயுததாரிகளை சரணடையுமாறு சவுதி அறிவித்தமையையிட்டு அங்கு வாழும் வெளிநாட்டவரிடையே பலத்த பீதியை ஏற்படுத்தியுள்ளது.

கடவுள் மீது ஆணையிட்டு சொல்கிறோம், குற்றங்களை மேற்கொள்பவர்கள் மீது எமது முழுப் பலத்தையும் பிரயோகித்து இறைவனின் அருளால் தாக்குதல் நடத்துவோம் இதனை ஒருவரும் தடுக்கமுடியாதெனவும் இளவரசர் அப்துல்லா தெரிவித்தார்.

சவுதியின் இந்த அறிவிப்பானது கடுமையானதாக இல்லாமல் மென்மையானதாக இருப்பதாக பி.பி.ஸியின் செய்தியாளர் தெரிவித்தார்.


கரும்புலிகள் நினைவாக

நிதர்சன நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்

கரும்புலிகளின் உள்ளத்துணர்வுகளை

பாட்டாகவும், படமாகவும் விவரணமாகவும்

நெஞ்சுக்குள்ளே நெருப்பூட்டும்



ஞானரதனின்
புயல் புகுந்த பூக்கள்
(வீடியோ படம்)

இசைவாணர் கண்ணனின்
இசையில்
கடற்கரும்புலிகள் பாகம் 8
(பாடல் இசைத்தட்டு)

உயிராயுதம் பாகம் 5 (கரும்புலி நினைவுகளின் காட்சித் தொகுப்பு)
வீடியோ விவரணம்
ஜூலை 5 முதல் தாயகமெங்கும்....

(C-2693)

விளம்பர அனுசரணை:

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தங்கநகை வாணிபத்தில்....
அன்றும், இன்றும், என்றும் அழியாப் புகழ்கொண்டோர்
சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜனாதிபதி, ஜே.வி.பியினரின் கையாட்கள் தனி அரசாங்கத்தை நடத்துகின்றனர்!

## ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவை சட்டவிரோதமாக கைது செய்ய முற்பட்டமை குறித்து ஐக்கிய தேசியக்கட்சி நேற்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, பேராசிரியர் ஜி.எல்பீரிஸ் ஆகியோர் இந்த முறைப்பாட்டைச் செய்தனர்.

இதேசமயம் காலியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் இது பற்றிக் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க -

இந்த நடவடிக்கைகள் குறித்துப் பொலிஸ் மா அதிபருக்குத் தெரியாது. அப்படியென்றால் இந்த அரசாங்கத்திற்குள் வேறொரு அரசாங்கம் இருக்கின்றது என்றுதானே அர்த்தம்.

பிரதமர், அமைச்சர்கள், பொலிஸ் மா அதிபர் இவர்களுக்கு மேலாகச் செயற்படும் அரசாங்கமொன்று உள்ளது. என்பதையே இந்த நடவடிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

ஜனாதிபதியினதும், ஜே.வி.பியினதும் கையாட்கள் சிலரே அரசினை நடத்திச் செல்கின்றனர். பொலிஸார் தம்மிடம் பிடிவிறாந்து உள்ளதாகக் கூறினார்கள்.

ஆனால், நீதிமன்றம் அவ்வாறான பிடிவிறாந்தினைப் பிறப்பிக்கவில்லை எனத் தெரிவிக்கின்றது. குறிப்பிட்ட நீதிமன்றத்தினை அவமதித்ததற்காக பொலிஸ் அதிகாரி மீது வழக்குத் தொடரவுள்ளோம். அத்துடன், ரவி கருணாநாயக்கவின் மனித உரிமையை மீறியமை தொடர்பாக பொலிஸாருக்கு எதிராக வழக்குத் தொடுக்கவுள்ளோம்.

இந்த அரசு பதவிக்கு வந்ததும் ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்கள், ரவூப் ஹக்கீம், தொண்டமான் ஆகியோருக்குப் பிரச்சினை கொடுத்தது. இப்போது ரவிகருணாநாயக்கவுக்கு பிரச்சினை கொடுக்கின்றது எனத் தெரிவித்தார்.

### பிடிவிறாந்து....

றும் நீதிபதி தெரிவித்தார்.

பொலிஸார் சமர்ப்பித்த அறிக்கைக்கு அமைய ரவிகருணாநாயக்காவும் மற்றும் இருவரும் வெளிநாடு செல்லாது இருக்க கடவுச்சீட்டுக்களைத் தடுத்து வைக்குமாறு குடிவரவு, குடியகல்வு அதிகாரிக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா முன்பிணை கோரிச் சமர்ப்பித்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

### கண்ணிவெடி அகற்றும்...

நடத்தப்பட்ட தாக்குதலில் 3 கன்ரர் வாகனங்களும், இரண்டு ஜீப் வண்டிகளும் முற்றாக எரிந்து நாசமாகின.

வாகனத் தரிப்பிடத்தின்மீது தாக்குதல் நடத்தப்பட்ட செய்தி அறிந்ததும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவன அதிகாரிகள் இது தொடர்பாக மாநகர சபை தீயணைப்புப் படையினருக்கும், பொலிஸாருக்கும் தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் - பாதுகாப்பு நடவடிக்கை எடுத்த அதேவேளை, தீயணைப்புப் படையினரின் நீண்ட நேரப் போராட்டத்தின் பின்னர் தீயை அதிகாலை 4 மணியளவிலேயே அணைக்கமுடிந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஹலோ ட்ரஸ்ட் நிறுவன யாழ்.திட்ட முகாமையாளர் வலம் குலோ கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவத்தில் அம்புலன்ஸ் வாகனம் ஒன்றும், கன்ரர் வாகனங்கள் மூன்றுமாக மொத்தம் 4 வாகனங்கள் திருத்தமுடியாத நிலையில் சேதமடைந்தன.

இவற்றைவிட 11 வாகனங்களின் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டன. ஒரு அம்புலன்ஸ் வாகனத்தின் பின்பகுதி தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளது. இவற்றைவிட அந்த வாகனத்தரிப்பிடத்திற்கு மின் வழங்கும் மின் பிறப்பாக்கியொன்றும் இந்தத் தாக்குதலில் செயலிழந்துள்ளது.

இனந்தெரியாத விஷமிகளின் இந்தச் செயற்பாட்டுக்கு என்ன காரணம் என தற்போது ஆராயப்பட்டு வருகிறது. ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்திற்கு தற்போது பொலிஸ், இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு எமது பணிகள் ஸ்தம்பித்தநிலையில் காணப்படும். இந்த சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளரை சந்திக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தரான 51 வயதான எல்.செல்வராசா யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### கருணாவுடன் இராணுவத்துக்கு...

யிட்டபோதே ரத்னசிறி விக்கிரமநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

சில வெளிச்சக்திகள் இராணுவத்திற்கு எதிரான குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை சீர்குலைக்க முற்படுகின்றன.

இந்த நடவடிக்கையால் அரசாங்கம் கவிழ்ந்துபோக மாட்டாது என்றும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க மேலும் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின்போது - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ஹேரத், இராணுவ அதிகாரிகள் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

கடந்த இரண்டரை வருடங்களாக யுத்த நிறுத்தம் அமுலிலிருந்தாலும் படையினரின் போரிடும் சக்தியில் எந்தவிதமாற்றமும் ஏற்படவில்லை. அவர்கள் மிகவும் பலமான இராணுவப் போர்ப் பலத்துடனேயே தொடர்ந்தும் இருந்து வருகிறார்கள்.

தற்போது அனைத்துப் படையினரும் உஷார் நிலையிலேயே உள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கருணாவுக்கு பாதுகாப்பு...

பொறுத்தவரையில் நடப்பதாகக் கூறப்படுபவை பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கருணாவுடன் தொலைபேசியில் பேசியிருக்கக்கூடும். பொதுவாக புலிகளின் பிணக்குக்கு பிறகு படையினர் முற்றிலும் ஒரு தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்து நடுநிலைமையுடன் இருந்து வருகின்றனர்.

கருணா தலைநகர் கொழும்புக்குவந்தது வேண்டுமென்றே செய்யப்பட்ட விடயமா? அல்லது வேறு மாதிரியாக நடந்ததா என்பது பொறுத்த விடயம். இந்தப் போர் நிறுத்த காலத்தில் கொழும்புக்கு அவர் வந்திருக்கமுடியும்.

அமைச்சருடன் நான் பேசினேன். இந்த அடிப்படையில் என்ன சொன்னீர்கள் என்று கேட்டேன். 'தனிப்பட்ட இராணுவ அதிகாரிகள் தனிப்பட்ட வகையில் இதில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் அரசோ, அரசபடைகளோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஈடுபடவில்லை என்று தான் கூறியதாக கூறினார் என்றும்' சிறில் ஹேரத் மேலும் தெரிவித்தார்.

### திங்களன்று...

கொழும்பு வரவுள்ளார்.

இவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட அரசதரப்பு பிரதிநிதிகளையும், கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்தித்துப் பேச்சு நடத்தவும் திட்டமிட்டிருப்பதாக தெரியவருகிறது.

324, Palaly Road, Jaffna.
யாழ் நகரில் Microsoft Certify System Engineers
Microsoft நிறுவனத்தினால் வழங்கப்படும் சர்வதேச தர சான்றிதழ்
நீங்களும் குறுகிய காலத்தில் சர்வதேச தர கணனி விற்பன்னராகலாம்.
மேலும் விபரங்களிற்கு, MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

### கருணாவுக்கு ராணுவப் பாதுகாப்பு...

கருணா விவகாரத்தில் ரணில் விக்கிரமசிங்க தனது முன்னாள் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அலிசாஹிர் மௌலானா ஊடாக பிரதானமத்தியஸ்தராக செயற்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி இரு உபாயங்களைப் பின்பற்றியுள்ளது. அதுதான் கருணா விவகாரத்தில் அரசாங்கத்திற்கு மாறுபட்ட நோக்கங்கள் உள்ளதாக ஊடகங்கள் மூலம் குற்றச்சாட்டுக்களை பரப்பிவந்தது.

அத்துடன் அரசாங்கம் கருணாவுடன் மறைமுகத் தொடர்புகளை வைத்துக்கொண்டு சமாதான முயற்சிகளுக்கு பாதகத்தை உண்டுபண்ணுவதாகவும் குற்றச்சாட்டை சுமத்தியது.

இந்தச்சம்பவம் தொடர்பாக நாம் முழுமையான கவனத்தைச் செலுத்த உள்ளோம். குடும்பத்தினர் சகிதம் கருணா வெளிநாடு செல்ல உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்பதனை நாம் அறிவோம். கருணா குடும்பம் வெளிநாடு செல்வதற்கான விசாவினைப் பெறுவதற்கு மிலிந்த மொறகொட உதவியுள்ளார்.

அரசாங்கம் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் வேளை விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகிச் சென்றவருக்கு உதவி வழங்கப்பட்டிருப்பது சமாதான முயற்சிக்கான வாய்ப்புக்களை நாசமடையச் செய்வதற்காக எதிர்க் கட்சியின் நடவடிக்கையே இதுவாகும்.

விடுதலைப் புலிகள் வெடிபொருட்களை வைத்துவிட்டு அதிகாரிகளை உஷாரடைய செய்வதற்காக தொலைபேசி மூலம் அறிவிப்பது அவர்களது பாணியல்ல. நான் நம்புகிறேன். கொழும்பில் கண்டெடுக்கப்பட்ட தற்கொலை அங்கிகள் மற்றும் வெடி பொருட்கள் வைத்தது யாரோ இனங்காணமுடியாத குழுவின் வேலையாகும்.

இந்த நடவடிக்கை மூலம் பதற்றத்தை ஏற்படுத்துவதே நோக்கமாகும். குறிப்பாக கொழும்பில் வாழ்பவர்களுக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் பீதியை ஏற்படுத்துவதாகும். இந்தப் பீதியை எதிர்க்கட்சிகளே ஏற்படுத்துகின்றன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த விபரங்கள் குறித்து நேற்றுமாலை அமைச்சர் மங்கள சமரவீரவின் அலுவலகத்தில் இருந்து ஒரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதில்-

கருணா விவகாரத்தில் இலங்கைப் படையினரின் தொடர்பு என்பது அரசாங்கத்தின் ஒப்புதலோடு நடந்ததாக ஒருபோதும் அமைச்சர் கூறவில்லை.

இந்த விவகாரத்தில் தனிநபர்கள் சம்மந்தப்பட்டிருக்கும் முயற்சி பற்றி கூறியதாகவும், அது பற்றி விசாரித்து வருவதாகவும் அமைச்சர் வலியுறுத்தியதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மண்ணில் மாபெரும்
கண்டிய நடனம்

இலங்கையின் தேசிய நடனமான கண்டிய நடனம் யாழ்.மண்ணில் உலகப்புகழ்வாய்ந்த கண்டிய நடனக் கலைஞர்களால் ஒவ்வொரு நடனத்திற்குமான தனித்தனி விளக்கங்கள் தமிழில் விளக்கப்படுத்தி நடைபெறவுள்ளது. இக்கண்டிய நடன நிகழ்ச்சியின் நடன அம்சங்களாக:

01. மங்கள வாத்தியத்துடன் நடனம்
02. பூஜா நடனம்
03. மயில் நடனம்
04. உடக்கி என்று அழைக்கப்படும் சாஸ்திரிய நடனம்
05. முகமூடி நடனம்
06. யக்கம் என்று அழைக்கப்படும் நகைச்சுவை நாட்டிய நாடகம்
07. கஜகாவண்ண நடனம்
08. ரபான் நடனம்
09. கோலாட்டம்
10. தமிழ் நடனப் பாடலுக்கு அபிநயம்
11. பந்தேரு நடனம்
12. பெண்கள் தீயுடன் ஆடும் நடனம்
13. கிராமத்து நடனம்
14. செம்பு நடனம்

இந்த நடனங்களுடன் இன்னும் பல கண்டிய நடனங்களும் நடைபெறவுள்ளன.

இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம் : 2004.06.27 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப. 1.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அனுமதிக்கு முந்துங்கள்.

T.K. ரூரிஸ்ற் இன்
இல.200, அரசடி வீதி,
பலாலி வீதி அருகில், கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.021 - 222 5680
(சி-2692)



இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.